வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 22.11.2021 திங்கட்கிழமை | இதழ் : 352 | பக்கங்கள் : 16

# காணாமலாக்கப்பட்டோரை கண்டறிய இருபது ஆவணங்கள் வேண்டுமாம்!

### உறவுகளுக்கு கா. ஆ. அலுவலகம் கடிதம்!

யாழ்ப்பாணம், நவ. 22

காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவர்களின் உறவினர்கள் 20 ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தமிழில் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த அலுவலகத்திற்கான விண்ணப்பம், காணாமல் ஆக்கப்பட்டவரின் தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம், பிறப்பு அத்தாட்சி பத்திரம் உட்பட 20 ஆவணங்களை

15

# சுமந்திரன் எம். பிக்கு கனடாவில் எதிர்ப்பு!

### சாணக்கியனுடன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்!

ஒன்ராறியோ, நவம்பர் 22

பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் கனடாவில் பங்கேற்ற கூட்டத்தில் தமிழர்களில் ஒரு சாரார் சுமந்திரனுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், அவர்கள் கூட்டத்திலிருந்து இடைநடுவிலேயே வெளியேறினர்.

15

## அனைத்துத் தரங்களுக்கும் இன்று பாடசாலை ஆரம்பம்!

### வடக்கில் ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 22

வடக்கு மாகாணத்தில் அனைத்து தரங்களுக்கும் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் உரிய வகையில் சுகாதார நடை

15

## டெல்டாவின் புதிய உப திரிபு மாணவரிடையே பரவ வாய்ப்பு

### அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்து

கொழும்பு, நவ. 22

நாட்டில் தற்போது இனங்காணப்பட்டுள்ள புதிய டெல்டா உப திரிபு பாடசாலைகள் மாணவர்கள் மத்தியில் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். இதனால், மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரி

15

## தொற்று அறிகுறிகள் இருந்தால் மாணவரை பாடசாலை அனுப்பாதீர்!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர்

கொழும்பு, நவ. 22

கொரோனா அச்சுறுத்தலால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் கட்டம் கட்டமாக மீண்டும் திறக்கப்பட்டுவரும் நிலையில் நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை சுகாதார

15



## தேச வழமை சட்டத்திலுள்ள நல்லவற்றை சேர்ப்போம்!

### யாழ்ப்பாணத்தில் ஞானசார தேரர்

யாழ்ப்பாணம், நவ. 22

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்ல விடயங்களையும் கண்டிய சட்டம், முஸ்லிம் திருமண சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்ல விடயங்களையும் பெற்று சிறந்த ஒரே சட்டத்தை ஏற்படுத்துவோம் என்று

15

## ஆயர்களின் முடிவு தேவையில்லாதது; இந்து வெறியர் கருத்து அருவருப்பானது

### தமிழ்த் தேசிய கட்சி தலைவர் சிறீகாந்தா

யாழ்ப்பாணம், நவ. 22

"ஆயர்கள் நினைவேந்தல் தொடர்பாக சொன்ன கருத்துக்கள் தொடர்பில் இந்து மத வெறியர்களின் கருத்துகள் அருவருக்கத்தக்கது. தமிழ் மக்களிடம் மத பேதங்கள் இருக்க கூடாது. ஆயர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்க தேவையில்லை."

இப்படி தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலை

15

## 35 வீதத்தால் தொற்று உயர்வு

கொழும்பு, நவ. 22

நாட்டில் கடந்த இரு வாரங்களில் கோவிட் தொற்றை ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் போது தொற்றாளர் எண்ணிக்கையானது 1.3 மடங்கால் அதா

15

## கொரோனா தொற்றால் 19 பேர் மரணம்!

கொழும்பு, நவ. 22

நாட்டில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தனவின்

15



# 10 நாள்களேயான சிசு உட்பட வடக்கில் 14 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், நவ. 22

பிறந்து 10 நாட்களேயான பச்சிளம்குழந்தை உட்பட வடக்கு மாகாணத்தில் 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 212 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையின் அடிப்படையில்,

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள பிறந்து 10 நாட்களேயான பெண் குழந்தை ஒருவர் உட்பட இருவர் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் 02 பேர் என வவுனியா மாவட்டத்தில் 4 பேர் இனங்காணப்பட்டனர்.

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 4 பேர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 03 பேர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவரும் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டனர். (ஐ)



## ஊர்காவற்றுறையில் கிளைமோர் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 22

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பிகை நகர் பகுதியில் கிடங்கு ஒன்றில் காணப்பட்ட கிளைமோர் வெடிகுண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமையவே குறித்த வெடிகுண்டு மீட்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

ஆறு கிலோ எடை கொண்ட குறித்த கிளைமோர் வெடிகுண்டு காணப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

குறித்த வெடிபொருளில் 'SN 96 எதிரியின் பக்கம்' என்றும் 'கொல்பவன் வெல்வான் - தயாரிப்பு தமிழீழம்' எனவும் எழுதப்பட்டிருந்தது. (ஐ-03)

## 697 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, நவ. 22

நாட்டில் மேலும் 697 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 56 ஆயிரத்து 626 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 381 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 26 ஆயிரத்து 734 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# போராட்டத்தால் ஈடுவைக்கப்பட்ட தமிழ் மக்களை மீட்க வேண்டும்!

### ஈ. பி. டி. பி. பொதுச் செயலர் டக்ளஸ் இப்படி சொல்கிறார்

கிளிநொச்சி, நவ. 22

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் பிரபாகரனின் தவறான அணுகுமுறைகளால் தமிழ் மக்களை ஈடுவைத்து விட்டு அழிந்து விட்டது. இதிலிருந்து மக்களை மீட்க வேண்டி இருப்பதால் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று சொல்லியுள்ளார் ஈ. பி. டி. பி. கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா. கிளிநொச்சியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான தீர்மானங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் செயலாற்ற வேண்டும்.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சமுர்த்தி வேலைத் திட்டங்கள் பற்றிய முழுமையான விபரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் இதன்போது கூறினார்.

மேலும், சமுர்த்தி உத்தியோகத்தர்களால் இடமாற்றம் போன்ற நிர்வாகம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில், பொதுவாக நிர்வாக விடயங்களில் தலையிடுவதற்கு தான் விரும்புவதில்லை என்றபோதிலும், நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வு கிடைப்பதற்கு முயற்சிப்பதாகவும் கூறினார். (ஐ)

## உழவியந்திரத்தின் கலப்பையில் சிக்கி 5 வயது சிறுவன் உயிரிழப்பு!

வவுனியா, நவ. 22

வவுனியா ஓமந்தை பாலமோட்டை பகுதியில் உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து 5 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அந்தப் பகுதியில் உள்ள காணியொன்றை உழவு இயந்திரத்தின் மூலம் பண்படுத்தும் நடவடிக்கையில் அதன் உரிமையாளர் ஈடுபட்டிருந்தார். வாடகைக்கு அமர்தப்பட்ட குறித்த உழவு இயந்திரத்தின் சாரதி காணியின் உரிமையாளரின் மகனையும் அவரின் உறவினரின் மகனையும் உழவு இயந்திரத்தில் ஏற்றியபடி நிலத்தை பண்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது இரு சிறுவர்களில் ஒருவர் திடீரெனக் கீழே தவறி வீழ்ந்து உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

அவரை, உடனடியாக மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும், சிறுவன் முன்னரே உயிரிழந்து விட்டாரென மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் பாலமோட்டை பகுதியை சேர்ந்த கந்தலதன் கனிஸ்ரன் வயது 5 என்ற சிறுவனே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம்
## 22 கார்த்திகை 2021

**"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இல்லையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"**

- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர்- சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

### கல்வி tv CHANNEL-1
### 22.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2
### 22.11.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
22.11.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்பின் நிலைமை?

கடந்த சில நாட்களாக - கூட்டமைப்பின் அமெரிக்க பயணம் தொடர்பான செய்திகள், முக்கிய இடத்தை பிடித்திருந்தன. தற்போது அந்த இடத்தை பிறிதொரு செய்தி மேவிவிட்டது. அதாவது, கனடாவில் இடம்பெற்ற கூட்டத்திலிருந்து எம். ஏ. சுமந்திரன் வெளியேற்றப்பட்டார் - என்னும் செய்தியே இப்போது முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது. அமெரிக்க பயணத்தைத் தொடர்ந்து, சுமந்திரன், கனடாவிலுள்ள கூட்டமைப்பின் ஆதரவாளர்களை சந்திக்கச் சென்றிருந்தார். சுமந்திரனின் அழைப்பில், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கி யன் இராஜபுத்திர இராசமாணிக்கமும் சென்றிருந்தார். கனடாவாழ் புலம்பெயர் அமைப்புக்களின் கடுமையான எதிர்ப்பால் குறித்த சந்திப்பை தொடர்ந்தும் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு, இறுதியில் கூட்டத்திலிருந்து, சுமந்திரன் வெளியேறும் நிலைமை ஏற்பட்டது. கனடாவை தொடர்ந்து இங்கிலாந்தில் ஒரு சந்திப்பு இடம்பெறவுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால், அங்கும் குழப்பங்கள் ஏற்படலாம்.

அமெரிக்க பயணம் தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைகள் இடம்பெற்றிருந்தன. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் இந்த விடயம் கலந்துரையாடப்படாமையால், பங்காளிக் கட்சிகள் அதிருப்தியடைந்திருந்தன. அதே வேளை நிபுணர் குழுவில் நியமிக்கப்பட்டிருந்தவர்கள் எவருமே பங்காளிக் கட்சிகளின் நம்பிக்கையை பெற்றவர்களும் அல்லர். இதனால், ஏற்பட்ட சல சலப்புக்கள் இறுதியில் சந்தேகங்களாக மாறின. அடுத்தது - உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் அமெரிக்க சந்திப்பில் இணைந்து கொண்டமை. இது புலம்பெயர் அமைப்புக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

ஏனெனில், சுரேன் சுரேந்திரன் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை தொடர்பில் பெரும்பாலான புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்வுண்டு. உலகத் தமிழர் பேரவை என்பது அடிப்படையில் பல அமைப்புக்களை உள்ளடக்கிய ஒரு புலம்பெயர் அமைப்புக்களின் கூட்டாகும். ஆனால், பின்னர் இந்த கூட்டிலிருந்து அனைத்து அமைப்புக்களுமே வெளியேறிவிட்டன. கனடிய தமிழ் காங்கிரஸ் மட்டுமே இப்போது எஞ்சியிருக்கின்றது. அமெரிக்க சந்திப்பில் பங்குகொண்ட புலம்பெயர் நபர்கள் அனைவருமே, உலகத் தமிழர் பேரவை என்னும் பதாகையின் கீழே பங்குகொண்டிருந்தனர்.

இந்த பின்புலத்தில் இது தொடர்பில் புலம்பெயர் சூழலில் கடுமையான ஆட்சேபனைகளும் எதிர்ப்புக்களும் வெளியிடப்பட்டன. இந்த சந்திப்பானது, அடிப்படையில் ராஜபக்ஷக்கள்மீதான சர்வதேச அழுத்தத்தை குறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதியென்றே புலம்பெயர் சூழலில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. புலம்பெயர் சூழலில் பொதுவாகவே சுமந்திரன் தொடர்பான அதிருப்திகள் உண்டு. இவ்வாறானதொரு சூழலிலேயே கனடா கூட்டத்தை பகிஷ்கரிக்குமாறு அங்குள்ள புலம்பெயர் செயல்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்தனர். இந்தப் பின்னணியிலேயே குறித்த கூட்டத்தின்போது குழப்பங்கள் ஏற்பட்டன.

ஆனால், இதன் விளைவான இறுதி செய்தி என்ன? அதாவது, கூட்டமைப்பினரின் கூட்டமொன்றை அங்குள்ள மக்கள் எதிர்த்திருக்கின்றனர். இது யாரை பாதிக்கின்றது? பங்காளிக் கட்சிகளுக்கு தெரியாமல், சக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமல், இரகசியமாக சம்பந்தன் போட்ட கணக்கு, இறுதியில் தேவையற்ற குழப்பங்களுக்கே வழிவகுத்திருக்கின்றது. கூட்டமைப்பை சீர்செய்வதில் சம்பந்தன் தொடர்ந்தும் காண்பித்துவரும் அசமந்தப் போக்கே அனைத்து குழப்பங்களுக்குமான காரணம். ஆனாலும் சம்பந்தனோ எதைப்பற்றியும் கவலையில்லாமல் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்.

இதுவரை உள்ளுக்குள் சிக்கல்களை சந்தித்துக் கொண்டிருந்த கூட்டமைப்பு - இப்போது போகும் இடமெல்லாம் பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. உண்மையில் கூட்டமைப்பின் அமெரிக்க சந்திப்பில் உலகத் தமிழர் பேரவை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் தனியாக சந்தித்திருந்தால் இந்த சிக்கல்கள் ஏற்பட்டிருக்காது. கடந்த ஆட்சிக் காலத்திலும், சுமந்திரன், தனது சுய தெரிவின் பெயரில் உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்தே செயல்பட்டிருந்தார். இது புலம்பெயர் சூழலில் கூட்டமைப்புக்கு எதிரான சிந்தனைப் போக்குக்கு காரணமாகியது. ஆனால், மீண்டும் அதே தவறு நிகழ்ந்திருக்கின்றது. ஆனால், இந்த தவறுகளின் விளைவுகளை பங்காளிக் கட்சிகளும்தான் எதிர்கொள்கின்றனர். ஏனெனில், அவர்களும் இணைந்ததுதான் கூட்டமைப்பு. பங்காளிக் கட்சிகள் ஏற்கனவே ஒரு முயற்சியை மேற்கொண்டிருந்தன. அதுவும் அடுத்த கட்டம் நோக்கி நகரவில்லை. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, கூட்டமைப்பிலுள்ளவர்களின் நிலைமை தொடர்ந்தும் சிக்கலாகவே இருக்கின்றது. உள்ளுக்குள் இருக்கவும் வேண்டும் ஆனால், உள்ளுக்குள் இருந்து எதனையும் கட்டுப்படுத்தவும் முடிவில்லை.

# அமெரிக்க - இந்திய கூட்டிணைவில் புதிய தீர்வுத் திட்டம்!

-அலசுவது இராஜதந்திரி-

*அமெரிக்க பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், அமெரிக்காவும் - இந்தியாவும் கூட்டிணைந்து இலங்கையின் வடக்கு - கிழக்கு இனப்பிரச்னைக்கு புதிய தீர்வுத் திட்டமொன்றை தயாரிக்க முன்வந்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.*

*பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறியிருப்பதை நோக்கும்போது இனப்பிரச்னை குறித்த தீர்வு முயற்சி ஒரு புதிய வடிவம்பெற இருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இதேவேளை, இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அமெரிக்காவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான குழுவினர் தெரிவித்துள்ளனர்.*

*எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ள அமெரிக்க - இந்திய கூட்டிணைவில் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு புதிய தீர்வுத்திட்டம் மற்றும் சீனாவின் பிரசன்னத்தை இலங்கையில் தமிழ் தரப்பு விரும்பவில்லை என்ற இரு விடயங்களையும் அலசி ஆராயும்போது அமெரிக்க - இந்திய பிராந்திய நலன்களை பேணும் விதத்தில் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பு முன்வந்துள்ளதோ என்று கூட எண்ணத்தோன்றுகின்றது.*

*எண்பதுகளின் ஆரம்பத்தில் மறைந்த தமிழ் அரசியல் பிரமுகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரம் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் அவருக்கு மசாசுசெட் மாநிலத்தில் வரவேற்பளித்திருந்தனர். அப்போது, அங்கே ஈழத்தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் தமிழீழக் கொடி என்று வர்ணிக்கப்பட்ட கொடியையும் மு. சிவசிதம்பரம் ஏற்றிவைத்திருந்தார்.*

*அமெரிக்க - இந்திய உறவுகள் இலங்கையுடன் மிக நீண்டகால வரலாற்று முக்கியத்துவத்தை கொண்டதாக அமைந்திருக்கின்றன. வடக்கு - கிழக்கில் காணப்படுகின்ற அமெரிக்க மிஷனரிமார்களால் நிர்மாணிக்கப்பட்ட கல்விக்கூடங்கள் இன்றுவரை பெரும் கல்விச்சேவையை வழங்கிவருகின்றன.*

*இலங்கையில் 2002ஆம் ஆண்டு நோர்வே, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்க தரப்பினருக்குமிடையே சமாதான பேச்சுக்களை ஆரம்பித்தபோது அமெரிக்காவும், இந்தியாவும் இணை அனுசரணை நாடுகளாக அந்தப் பேச்சுக்களில் பங்குபற்றியிருந்தன.*

*இந்திய - அமெரிக்க அனுசரணையுடனான நோர்வேயின் சமாதான முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் அனுசரித்திருப்பர்களேயானால் பேரழிவுகளை தவிர்த்து ஆக்கபூர்வமான அரசியல் தீர்வொன்றை எட்டியிருக்க முடியும். ஆனால், நோர்வேயின் சமாதான முன்னெடுப்பையும், அனுசரணை நாடுகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் புறந்தள்ளியமை துரதிர்ஷ்டவசமானதென்றே குறிப்பிடமுடியும்.*

*தற்போது, வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகியுள்ள தருணத்தில் மீளவும் இந்திய - அமெரிக்க கூட்டிணைவில் இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வுத் திட்டமொன்றை வகுக்க முயற்சி எடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.*

*அத்தகைய ஒரு முயற்சியில் அமெரிக்காவும், இந்தியாவும் இறங்குமேயானால் அந்த முயற்சி நிச்சயம் வரவேற்கப்படவேண்டியதே என்று குறிப்பிடலாம்.*

*ஏனெனில், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கத்தை தமது நாடுகளின் மாநிலங்களில் வெற்றிகரமாக இந்தியாவும், அமெரிக்காவும் மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவும், அமெரிக்காவும் ஜனநாயக ரீதியாக ஊறித்திளைத்த நாடுகளாக இருப்பதோடு இந்த இரு நாடுகளிலும் இருக்கின்ற பலதரப்பட்ட இனத்தவர்களும் மிக உயர்வான தலைமைத்துவ பதவிகளுக்கு வந்துள்ளனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.*


*இந்தியாவைப் பொறுத்தவரை அந்த நாட்டிலுள்ள பலதரப்பட்ட இனத்தவர்களின் தனித்துவங்களும் மாநில வாரியான அதிகாரப் பரவலாக்கம் மூலம் மிக நல்ல முறையில் பேணப்படுகின்றது.*

*இந்நிலையில், ஏற்கனவே இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தின் உருவாக்கத்துக்கு உதவிய ரீதியில் அமெரிக்காவுடன் இணைந்து இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான அரசியல் தீர்வைக் காண முன்வருவது வரவேற்புக்குரியதாகவே இருக்கமுடியும்.*

*இருந்தபோதிலும் அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கையின் வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு விடயத்தில் தமது பிராந்திய நலன்களை முன்னிலைப்படுத்தும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்பை தமது பிராந்திய அரசியல் கெடுபிடிகளுக்கு இரையாக்கிய தவறை புரிந்தவையாகவே இருக்கும்.*

*ஏனெனில், இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றின் கவனம் தற்போது இலங்கை மீது திரும்பியுள்ளமைக்கான காரணம், இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம் என்பதையும் நன்கறிய முடியும். இந்நிலையில் ‘ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை’யாக இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டிணைந்து தயாரிக்க முன்வரும் தீர்வுத்திட்டம் அமைந்துவிடாதிருப்பதையும் வடக்கு - கிழக்கு தமிழ்த் தரப்பு உறுதி செய்ய வேண்டியது அவசியமானதாகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சந்தோஷ செய்திகள் வந்து மகிழ்ச்சி தரும். சுறுசுறுப்பு கூடும். வியாபாரிகளுக்கு பண வரவு அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும். உடன்பிறந்தோர் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி முடிவாகும்.

**இடபம்**
நண்பர் வீட்டில் சுபநிகழ்வு நடக்கத் துணையாக இருப்பீர்கள். புதிய விஷயங்கள் கற்கும் திறன் உங்களிடம் அருமையாக இருக்கும். பணியாளர்களுக்குத் தொழில் செய்யும் எண்ணம் வரும்.

**மிதுனம்**
உங்களின் சாதனைக்கு பாராட்டு கிடைக்கும். திருப்தியான நாள். குடும்பம் மகிழும். தொழிலில் இருந்த தேக்க நிலை மாறும். கலைத்துறையினர் வாய்ப்புகள் பெற்று வளம் அடைவீர்கள்.

**கடகம்**
கடந்த நாட்களின் வருத்தம் தீரும். வியாபாரத்தில் வரவு உயரும். உறவினர் சந்திப்பால் நன்மை ஒன்று நிகழும். சிலர் தந்த சிரமம் தீரும். எதிர்பாராத வேலை ஒன்றை செய்து முடிப்பீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்**
தாயாருடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் முடிவுக்கு வரும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புது வேலை தேட உகந்த நேரம். செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். பயம் நீங்கும்.

**கன்னி**
முக்கியமான சில நபர்களை சந்தித்து நலம் அடைவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் வரும். கவலை ஒன்று நீங்கும். பணியில் திருப்தி உண்டாகும். உங்களின் கனவு நனவாகும்.

**துலாம்**
குடும்ப விவகாரங்களில் நல்ல மாற்றம் உண்டாகும். பணியாளர்கள் பாராட்டு பெறுவீர்கள். புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு பற்றி நல்ல செய்திகளை பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
சுபநிகழ்ச்சிகள் நடக்கலாம். மனஅழுத்தம் தீரும். மனதில் நினைப்பதை யாரிடமும் வெளிப்படையாக கூற வேண்டாம். மற்றவரைச் சரியாக எடைபோடுவீர்கள். உழைப்பால் மேன்மை உண்டு.

**தனுசு**
சுபநிகழ்ச்சிகள் நிறைந்த நாள். பொறுமையைக் கடைப்பிடிப்பீர்கள். உங்களது ரகசியங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. நண்பர் ஒருவர் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**மகரம்**
வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் நன்மை உண்டு. சிறு சிறு பிரச்னைகளைச் சந்தித்து அதிலிருந்து மீண்டுவிடுவீர்கள். சொத்து வாங்கும்போது கவனத்துடன் ஆராய்ந்து வாங்குங்கள்.

**கும்பம்**
தொழிலில் நல்ல லாபம் வரும். உங்களின் பல நாள் ஆசை நிறைவேறும். சுபச்செலவு உண்டு. நிதி விரிவாக்கத்தில் ஆர்வம் ஏற்படும். பணியாளர்களுக்கு பாராட்டால் பெருமிதம் அதிகரிக்கும்.

**மீனம்**
திடீர் சலிப்பு வந்து இன்றே சரியாகிவிடும். சிறு பயணம் உண்டு. குழந்தைகளால் நெடுநாளைய கவலை தீரும். மேலதிகாரிகளின் கருணை உங்களுக்கு கிடைக்கும். சிறிய சாதனை செய்வீர்கள்.

# பா.ஜ.க. அரசுக்கு எதிராக தமிழகத்ததில் காங்கிரஸ் பிரசார பயணத்துக்கு ஏற்பாடு

## கே. எஸ். அழகிரி அழைப்பு

சென்னை, நவ. 22

பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் தமிழகம் முழுவதும் பிரசார பயணம் மேற்கொள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சி அறிவுறுத்தி உள்ளது.

இது தொடர்பில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைந்து கடந்த 7 ஆண்டுகளாக தவறான பொருளாதார கொள்கை காரணமாக மக்கள் அனைத்து நிலைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். கடும் விலைவாசி உயர்வால் தவியாய் தவிக்கும்



மக்களின் நிலை மிகவும் கவலைக்குரியது.

கடந்த ஓராண்டில் சமையல் எண்ணெய் விலை 2 மடங்கு உயர்ந்திருக்கிறது. கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பெட்ரோல் மீதான கலால் வரி 250 சதவீதம் உயர்ந்து ரூ.32.98 அதிகரித்து உள்ளது. இதே போன்று, டீசல் மீதான கலால் வரி 800 சதவீதம் அதிகரித்து ரூ.31.83 அதிகரித்து உள்ளது. கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடி வருகிறது.

மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையில் வருகிற 22ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை தமிழ கம் முழுவதும் விழிப்புணர்வு பிரசார பயணம் மேற்கொள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சி அறிவுறுத்தி உள்ளது.

இந்த பயணம் மக்களிடையே பா.ஜ.க. அரசுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் காங்கிரஸ் கட்சியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நம்முடைய கட்சிக்காரர்களே பா.ம.கவுக்கு குழி பறித்தனர்

## தொண்டர்கள் மத்தியில் ராமதாஸ் பேச்சு

சென்னை, நவ. 22

உள்ளூர் புரிதலுக்கு விட்டுக்கொடுப்பது என தி.மு.க.வுக்கும், காங்கிரஸூக்கும் வேலை செய்து நம்முடைய கட்சிக்காரர்களே பா.ம.க.வுக்கு குழி பறித்தனர். அடுத்த சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் அன்புமணி தலைமையிலான பாமக ஆட்சி அமைய வேண்டும் என்று தொண்டர்கள் மத்தியில் கட்சி நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

திண்டிவனம், வானூர், செஞ்சி, மயிலம் ஆகிய சட்டமன்ற தொகுதி பா.ம.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திண்டிவனத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்ததாவது;

தேர்தலில் தனியாக நிற்க வேண்டாம், நம்மிடம் சக்தி இல்லை, சக்தி இழந்து கிடக்கிறோம், ஏதாவது ஒரு கட்சியுடன் கூட்டணி வைக்கலாம் என நீங்கள் வற்புறுத்தினீர்கள். இதனால் மாறி, மாறி கட்சிகளுடன் கூட்டணி வைத்து 20 எம்.எல்.ஏ.க்கள், 25 எம்.எல்.ஏக்கள், 18 எம்.எல்.ஏ.க்கள், 6 எம்.பிக்கள், 10 ஆண்டு காலம் 2 மத்திய அமைச்சர்கள் என பா.மா.க.வின் பலம் செல்வாக்கு உயர்ந்தது.

தற்போது நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் 23 தொகுதிகளில் 5 தொகுதியில் தான் வெற்றி பெற்றுள்ளோம். உள்ளூர் புரிதலுக்கு விட்டுக்கொடுப்பது என தி.மு.கவுக்கும், காங்கிரஸூக்கும் வேலை செய்து நம்முடைய கட்சிக்காரர்களே பா.ம.க.வுக்கு குழி பறித்தனர். இதனால் 2 தொகுதிகளை இழந்தோம்.

ஏன் இந்தப் பின்னடைவு? பா.ம.க.வின் தொண்டனாக எப்போதும் இருப்பேன். உயிரே போனாலும் காசு வாங்க மாட்டேன் என்று இருப்பவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.வருகிற சட்டமன்ற தேர்தலில் பா.ம.க. ஆட்சி அமைக்க வேண்டும். அன்புமணிக்கு என்ன குறை உள்ளது. அவர் திறமையானவர். அவரின் தலைமையில் பா.ம.க.வின் ஆட்சி அமைய வேண்டும்” என அவர் கூறினார்.

## ஜெய்பீம் திரைப்பட சர்ச்சை:

# முழு பொறுப்பு என்னுடையது சூர்யாவுக்கு சம்பந்தமில்லை!

## இயக்குநர் ஞானவேல் பரபரப்பு அறிக்கை

சென்னை, நவ. 22

‘ஜெய் பீம்’ திரைப்படத்திற்கு எல்லா தரப்பினரிடமிருந்தும் கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சி அளித்தது. அதேபோல, இத்திரைப்படத்திற்கு எழுந்த சில எதிர்மறைக் கருத்துகள் சற்றும் எதிர்பாராதவை. இயக்குநராக நான் மட்டுமே பொறுப்பேற்க வேண்டிய விசயத்திற்கு சூர்யாவை பொறுப்பேற்கச் சொல்வது துரதிர்ஷ்டவசமானது என அதன் இயக்குநர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

“ஜெய்பீம் படத்தின் ஆக்கத்தில் எந்தவொரு தனிப்பட்ட நபரையோ, எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தையோ அவமதிக்கும் எண்ணம் சிறிதளவும் இல்லை. இதன் பொருட்டு மன உளைச்சல் அடைந்தவர்களுக்கும், புண்பட்டவர்களுக்கும் என் உளப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று படத்தின் இயக்குநர் ஞானவேல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

“தமிழ் நிலம் எப்போதும் நல்ல முயற்சிகளை வாழ்த்தி வரவேற்கும் என்பது மீண்டும் நிரூபணமாகி இருக்கிறது. ‘ஜெய் பீம்’ படத்திற்கு மிகப் பெரிய அளவில் வாழ்த்தும் வரவேற்பும் அளித்த அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘ஜெய் பீம்’ திரைப்படத்திற்கு எல்லா தரப்பினரிடமிருந்தும் கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சி அளித்தது. அதேபோல, இத்திரைப்படத்திற்கு எழுந்த சில எதிர்மறைக் கருத்துகள் நான் சற்றும் எதிர்பாராதவை.

பின்னணியில் மாட்டப்படும் ஒரு கலண்டர் படம், ஒரு சமூகத்தைக் குறிப்பதாகப் புரிந்து கொள்ளப்படும் என நான் அறியவில்லை. 1995 காலத்தைப் பிரதிபலிப்பதே அந்த கலண்டரின் நோக்கமே அன்றி, குறிப்பிட்ட சமூகத்தின் குறியீடாக அதைக் காட்ட வேண்டும் என்பது எங்கள் யாருடைய நோக்கமும் அல்ல.

இயக்குநராக நான் மட்டுமே பொறுப்பேற்க வேண்டிய விஷயத்திற்கு சூர்யாவை பொறுப்பேற்கச் சொல்வது துரதிர்ஷ்டவசமானது. தயாரிப்பாளராகவும், நடிகராகவும் இத்திரைப்படத்தில் சூர்யா பழங்குடியின மக்களின் துயரங்களை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டிருந்தார். இயக்குநராக என் பொருட்டு அவருக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருத்தத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.”

இவ்வாறு ஞானவேல் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

# 100,000 பனை விதைகள் நடுகை; த. தே. ம. முன்னணி ஆரம்பித்தது

**யாழ்ப்பாணம், நவ. 22**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சுற்றுச்சூழல் அணியால் 'எமது நிலம் எமது மரங்கள்' எனும் தொனிப்பொருளில் ஒரு இலடசம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் நேற்று ஆரம்பமானது.**

வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ள இந்த விதை நடுகை வேலணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்திற்காக மூன்று பிள்ளைகளை அர்ப்பணித்த தந்தை முதல் விதையை நாட்டிவைத்தாரரென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவித்துள்ளார். (ஐ)





# உடுவிலில் குழு தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 22

உடுவில் - அம்பலவாணர் வீதியிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கொரோனா தொற்றால் பிரபல வர்த்தகர் மரணம்!

மானிப்பாய், நவ. 22

மானிப்பாயின் பிரபல வர்த்தக நிலையமான சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் ஸ்தாபகர் சிவகுமார் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று மதியம் அவர் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று அவர் மரணமானார். (ஐ - 5)

# தவிசாளர் நிரோஷுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் உப தவிசாளர் கபிலன் ஆகியோரை இன்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இந்தக் கட்டளை அச்சுவேலி பொலிஸாரால் தவிசாளர் மற்றும் உப தவிசாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தொடர்பில் நீதிமன்றங்களால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில் மாவீரர் தினம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டே இந்த அழைப்புக் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம், தியாகி திலீபன் நினைவு தினம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரால் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. மாவீரர் வாரம் ஆரம்பித்துள்ள நிலையில் தவிசாளருக்கு நீதிமன்றால் அழைப்பு கட்டளை விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 03)

# சிறிய, நடுத்தர முதலீட்டாளர்களுடன் மத்திய வங்கி விசேட கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், நவ. 22

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு உள்ள பிரச்னைகள் தொடர்பில் அறிந்து தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதியில் நடைபெற்றது.

வட பிராந்தியத்துடன் தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பிராந்தியத்தின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குதல், சிக்கல்களை கையாள்வதற்கான சாத்தியமான தீர்வுகள் மற்றும் உத்திகள் வழங்குவதை நோக்காக கொண்டு, இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.



இந்தக் கலந்துரையாடலில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள், வங்கிகளின் பிராந்திய பொது முகாமையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, முதலீட்டாளர்களின் பிரச்னைகளைக் நேரடியாக கேட்டறிந்து கொண்ட மத்திய வங்கி ஆளுநர், வட மாகாண ஆளுநர், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மற்றும் வங்கி அதிகாரிகளுடன் பேசி, அதற்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ஐ)

# வீதியில் கழிவுகளை கொட்டியவரையே அள்ள வைத்த வட்டுக்கோட்டை பொலிஸ்!

யாழ்ப்பாணம், நவ. 22

வீதியில் குப்பைகளை கொட்டிச் சென்றவரை பிடித்து அவரைக் கொண்டே அந்தக் குப்பைகளை அகற்ற வைத்தனர் வட்டுக்கோட்டை பொலிஸார்.

தொல்புரம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு அப்பகுதி மக்கள் பலரும் பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தொல்புரம் பகுதியை சேர்ந்த ஒருவர் லாண்ட்மாஸ்டரில் தனது வீட்டின் கழிவுகளை ஏற்றிவந்து வீதிக் கரையில் கொட்டிவிட்டு சென்றுள்ளார்.



இது தொடர்பாக ஆராய்ந்த அந்தப் பகுதி பிரதேச சபை உறுப்பினர், வீடுகளில் பொருத்தப்பட்ட சி. சி. ரீ. வி. கமெராவின் உதவியுடன் இவ்வாறு பொறுப்பற்று குப்பைகளை கொட்டியவரை அடையாளம் கண்டார். இதை ஆதாரமாகக் கொண்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டை பெற்ற பொலிஸார் அவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து கண்டித்தனர். அத்துடன், கொட்டிய குப்பைகளை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டனர். இதைத் தொடர்ந்து பொதுமக்கள் முன்னிலையில் குறித்த நபர் அந்தக் கழிவுகளை அகற்றினார். (ஐ)

# 6.8 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா அரியாலையில் சிக்கியது

யாழ்ப்பாணம், நவ. 22

அரியாலை கடற்பரப்பில் டிங்கி படகு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 229 கிலோ கிராம் கேரள கஞ்சாவை மீட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் கடற்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கடல் வழியாக போதைப் பொருள்கள் உட்பட பல்வேறு கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்க கடற்படையினர் நாட்டின் கரையோரங்களில் வழக்கமான சுற்றுக்காவல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி, வடக்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தின் சிறப்புப் பிரிவு நேற்று காலை அரியாலைப் பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது.

கடற்படை நடவடிக்கை காரணமாக கரைக்கு கொண்டு வர முடியாது கைவிடப்பட்ட டிங்கி படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 பைகளில் 105 பொதிகளில் இடப்பட்டிருந்த 229 கிலோ 350 கிராம் கேரள கஞ்சாவை கடற்படையினர் மீட்டனர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் தற்போதைய பெறுமதி 6 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி வடக்கு மாகாணத்துக்கு வருகை!

வவுனியா, நவ. 22

**கலகொடை அத்தே ஞானசாரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி வடக்கு மாகாணத்துக்கு வந்துள்ளது.**

வடக்கு மக்களின் பிரச்னைகள் குறித்து ஆய்வு செய்வது தொடர்பான விசேட வேலைத்திட்டங்கள் பல செயல்படுத்தவுள்ளன என்று இந்த செயலணியின் தலைவர் கலகொடை அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்னைகள் குறித்து அறிந்து கொண்டாரெனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் பிரச்னைகள் என்ன என்பது குறித்து தாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்தாரெனத் தெரிவித்த அவர், அந்த பிரச்னைகளை யோசனையாக தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளார் என்றும் கூறினார். (ஐ)

# கட்டுப்பாட்டை இழந்த ஹன்ரர் மோதியதில் இருவர் படுகாயம்!

## - கிளிநொச்சி டிப்போ சந்தியில் -

கிளிநொச்சி, நவ. 22



வேகத்தை கட்டுப்படுத்த முடியாத ஹன்ரர் வாகனம் பேந்து நிலையத்தில் நின்றிருந்த முச்சக்கர வண்டி, கார் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில். இதில் படுகாயமடைந்த இருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று நண்பகல் 12 மணிளயவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பரந்தனிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த ஹன்ரர் வாகனமே இந்த விபத்தை ஏற்படுத்தியது.

இந்த விபத்தால், மூன்று வாகனங்களும் சேதமடைந்தன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 15ஆம் திகதி விபத்து இடம்பெற்ற பகுதியை அண்மித்துள்ள கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் முன்பாக பாதசாரி கடவையில் இவ்வாறானதொரு விபத்தின்போது பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு மாணவி படுகாயமடைந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசியல் கைதிகளுக்கு விடுதலை; ஞானசார தேரர் உறுதியளித்தார்!

## முன்னாள் அரசியல் கைதி தெரிவிப்பு

வவுனியா, நவ. 22

அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் உறுதியளித்தார் என்று முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியுடன் வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஞானசாரர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடலில் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரைகள் அமைக்கப்படுதல், எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுதல் தொடர்பான பிரச்னை, மாவீரர் தினம் தொடர்பில் எமது உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்னை தொடர்பில் நான் பேசியிருந்தேன்.

அப்போது அவரிடம் இருந்து வந்த பதிலில் அரசியல் கைதிகள் தொடர்பாக உள்ளே இருப்பவர்கள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பேசியுள்ளார். மிக விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடமும் தெரிவித்தாரென வும் கூறினார்.

மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவு கூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். படுகொலைகள் பல நடந்தன. அதனை நாம் அன்றாடம் நினைவுகூர முடியாது. இதனை ஒரே வாரத்தில் செய்கின்றோம் என தெரிவித்தேன். இதன்போது இந்த விடயம் தொடர்பில் தான் முழுமையாக பதில் செல்ல முடியாது என வும், இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக மேற்கொண்ட விடயம் தவறு. அதற்கு அனுமதிக்க முடியாது. உங்களுடைய வலிகள், பிரச்னைகளை புரிந்திருந்தாலும் இதற்கான பதிலை வழங்கக் கூடிய நிலையில் இல்லை. எங்களுடன் சேர்ந்து இவற்றை மறந்து நீங்கள் பயணிக்க வேண்டும்.

இதைவிட பிரச்னையான பல விடயங்கள் இருக்கின்றன. சாப்பாடு இல்லை, வீடு இல்லை, தண்ணீர் இல்லை இவை பற்றி நாம் பார்ப்போம் எனத் தெரிவித்தார் என்றார். (ஐ)



# ஐயப்பன் ஆலய கும்பாபிஷேகம்

தென்மராட்சி, நவ. 22

கொடிகாமம் - வரணி -குடமியன் பகுதியில் சபரிமலை ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சபரிமலையின் மஞ்சமாதா சந்நிதியின் மேல்சாந்தி பிரமஸ்ரீ எம். என. ரெஜிக்குமார் நம்பூதிரி தம்பாபிஷேகத்தை கேரள தாந்திரிக முறைப்படி நடத்தி வைப்பார். எண்ணெய்க் காப்பு, பால்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளது. (ஐ)

# 'டைனமற்' வெடிபொருள் மன்னாரில் பிடிபட்டது!

## இரு சந்தேகநபர்கள் கைது

மன்னார், நவ. 22

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 998 கிலோ டைனமற் வெடிபொருள்கள் நேற்று முன்தினம் மாலை கைப்பற்றப்பட்டன. அத்துடன், இரு சந்தேகநபபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் பொலிஸார் தெரி வித்தனர்.

மன்னார் - சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே டைனமற்கள் கைப்பற்றப்பட்டன. கடற்படையினர் அளித்த இரகசிய தகவலை தொடர்ந்து, மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், 998 கிலோகிராம் எடையுள்ள குறித்த டைனமற் வெடிபொருள்களை கைப்பற்றி யுள்ளனர்.

இந்த வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்பிடிக்க திட்டமிட்டனர் என்று தெரிய வந்துள்ளது. அத்துடன், கைதானவர்கள் சாந்திபுரம் மற்றும் வங்காலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோம்பையன்மணல் சூழலில் அதிகரிக்கின்றது கழிவுகள்!

## விபத்துக்களும் அதிகரிப்பு

மானிப்பாய், நவ. 21

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட கோம்பையன்மணல் மயானத்தின் மேற்கு பகுதியில் கழிவுகள் அதிகளவில் கொட்டப்படுகின்றன. பிரதான வீதிக்கு அருகில் கொட்டப்படும் கழிவுகளால் அந்தப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இதனால், அந்தப் பகுதியில் விபத்துக்களும், நாய்களால் மனிதர்கள் கடிபடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

பொலித்தீன், திண்மக் கழிவுகளுடன் மலக் கழிவுகளும் அந்தப் பகுதியில் கொட்டப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. இது அந்தப் பகுதியின் சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக வீதியால் பயணிப்பவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாநகர சபையின் சுத்தப்படுத்தும் பணியாளர்கள் இந்தக் கழிவுகளை அகற்ற முன்வருவதில்லை என்றும் அந்த வீதியை பயன்படுத்துபவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, இது விடயத்தில் யாழ். மாநகர சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-5)

# சுமந்திரன் எம். பியின் சட்ட புலமையால் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை

## அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு




கிளிநொச்சி, நவ. 22

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுத் தந்திருக்கவில்லை என்று தெரிவித்த வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், அறைகளுக்குள் விளக்கேற்றி, படங்களை பிரசுரிப்பதை விடுத்து பொது வெளிக்கு வர வேண்டும் என வும் கூறினார்.

நேற்று கிளிநொச்சியில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நவம்பர் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம், மே 18ஆம் திகதி பொதுமக்களுக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்ற இரு நிகழ்வுகளையும் தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் தொடர்ந்து தடுத்து வந்திருக்கின்றனர். எங்கள் நிகழ்வுகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோது, கொரோனாவை சாட்டாக வைத்துக்கொண்டு, அவர்கள் பழிவாங்குகின்ற அல்லது குரல்வளையை நெரிக்கின்ற செயல்பாட்டை முன்னெடுத்த வருகின்றார்கள்.

கடந்த மாவீரர் தினத்தில் நீதிமன்ற தடைகளை பெற்றது போன்று, பொலிஸார் இம்முறையும் தடைகளை பெறுகின்றனர். உண்மையில் இந்த தடையை பொலிஸார் கொண்டுவர விரும்பினால், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் அவர்கள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அவ்வாறு கொண்டுவர வேண்டுமானால், பாராளுமன்ற வர்த்தமானி அறிவிப்பு கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஓர் இடத்தை சொல்லாமல், வெறுமனே தொகுதியை அல்லது மாவட்டத்தை மையப்படுத்தி தடைகளை எடுத்து வருகின்றார்கள்.

இந்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்தக்கூடிய சட்டத்தரணிகள் குழாம் இருக்க வேண்டும். அந்த சட்டத்தரணிகள் குழாம் தமிழ்த் தேசியம் சார்ந்து விவாதிக்க வேண்டிய வேளை வந்திருக்கின்றது. மனமுவந்து சட்டத்தரணிகள் குழாம் இதற்கு தயாராக வேண்டும். நினைவுகூரல் என்பது மனித உரிமைக்குரிய ஒரு நிகழ்வு.

உண்மையில் சுமந்திரனுடைய சட்டம், சட்ட புலமை தமிழ் மக்களுக்கு பயன்பட்டதாக இல்லை. ஏனைய தமிழ் கட்சிகளினுடைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரனுடைய கட்சியாக இருக்கட்டும் எல்லோருமே ஒன்றுபட்டு இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு உடனடியாக இதனை எவ்வாறு எதிர் கொள்வது பேசப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# யூரியா உட்பட இரசாயன உரங்களின் போதியளவு இறக்குமதிக்கு அனுமதி

## விவசாய அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

**கொழும்பு, நவ. 22**

**யூரியா உட்பட தரமான இராசயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் கே. ஜெயசிங்க அறிவித்துள்ளார்.**

இதன்பிரகாரம், யூரியா உள்பட அடையாளம் காணப்பட்ட இராசயன உர வகைகளின் கொள்வனவுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்கு அவசரத் தேவை யாகவும் ஏனைய விவசாயப் பயிர்ச் செய்கைக்காகவும் உரங் கள் மற்றும் விவசாய இரசாய னங்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான மழைப் பொழிவால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை கருத்தில் கொண்டே இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய பணிப்பாளர், கலால் பதிவாளரின் ஆலோசனையின் பேரில் விவசாயிகளுக்கு போதுமானளவு விவசாய இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சிகளின் பதவி காலத்தை ஒரு வருடத்தால் அதிகரிக்க முடிவு!

கொழும்பு, நவ. 22

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை தேர்தல் இன்றி அரசாங்கம் ஒரு வருடத்திற்கு நீடிக்கவுள்ளது என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட் டுள்ளது.

இதன்படி, 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகள் என 340 உள்ளூாராட்சி மன்றங்களின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் நான்கு வருட கால அவகாசம் முடிவடைந்த பின்னர் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் கால நீடிப்புக்கு தற்போதைய தொற்றுநோய் நிலைமை மற்றும் நாடு எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியை அரசு மேற்கோள் காட்டுவதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவித்துள்ளன.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் 4 ஆயிரத்து 917 உள்ளூராட்சி மன்ற வட்டாரங்களுக்கு தலா 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்வதற்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

இதனை அடுத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை தேர்தலின்றி ஒரு வருடத்துக்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு காரணமாக அரசுக்கு 19 ஆயிரத்து 66. 8 கோடி ரூபாய் செலவாகும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் அரசியல் கட்சிகள் எதுவாக இருந்தாலும் அவர்க ளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்படும் என நிதி அமைச்சர் கூறியிருந்தார்.

# வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் வாக்களிக்காது!

## கட்சி உயர்பீட கூட்டத்தில் முடிவு

கொழும்பு, நவ. 22

வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என்று அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான அந்தக் கட்சியின் உயர்பீட கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே வரவு - செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்பீட கூட்டத்தை நிறைவு செய்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரவூப் ஹக்கீம்,



"வரவு - செலவு திட்டத்தை ஆதரவாக வாக்களிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் கலந்து கொண்டிருந்தார். ஏனையோர் சுகயீனம் காரணமாக கலந்து கொள்ள முடியாது என அறிவித்துள்ளார்கள்" என்றும் கூறினார். (ஐ)

# அருட்தந்தை சிறில்மீது இன்றும் விசாரணை

கொழும்பு, நவ. 22

அருட்தந்தை வண. பிதா சிறில் காமினியை இன்று காலை 9.30 மணிக்கு மூன்றாவது நாளாக வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வருமாறு சி.ஐ.டியினர் அழைத்துள்ளனர்.

இணைய சந்திப்பு ஒன்றில் அரச புலனாய்வு திணைக்கள பணிப்பாளர் தொடர்பில் அவர் தரிவித்த கருத்து தொடர்பில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை அவரிடம் சி. ஐ. டியினர் வாக்குமூலம் பெற்றனர். மறுநாளும் - அதாவது கடந்த புதன்கிழமையும் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இதனை மறுத்த அருட்தந்தை பிறிதொரு நாளில் வருவதாகக் கூறியிருந்தார். இதையடுத்தே இன்று அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# திறைசேரிக்கு அறிவிக்காமல் 4 திட்டங்களுக்கு அரசு செலவு!

## கணக்குகள் குழுவால் விடயம் அம்பலம்

கொழும்பு, நவ. 22

திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு அறிவிக்காமல் நான்கு திட்டங்கள் நேரடி வெளிநாட்டு நிதியுதவிகள் செலவுசெய்யப்பட்டமை குறித்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் தெரியவந்தது.

2017, 2018, 2019 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக சுற்றாடல் துறை அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டபோதே இது குறித்த தகவல்கள் வெளியாகின.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கூடியது.

99 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான மூன்று திட்டங்கள் மற்றும் 18.6 இலட்சம் யூரோ பெறுமதியான திட்டங்களே இவ்வாறு நேரடி நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக அறியப்பட்டிருந்தது. எனினும், இத்திட்டங்கள் குறித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிதியுதவிகள் கிடைக்கும்போதும் அவற்றை செலவு செய்யும்போதும் அதுபற்றி திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோபா குழு, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

அத்துடன், அரசாங்க மருத்துவமனைகளின் இரசாயனக் கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் சுற்றாடலுடன் கலப்பதினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசு தொடர்பில் கவனம் செலுத்துவது குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் கோபா குழுவில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் உரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக குழுவில் ஆஜராகியிருந்த அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். (ஐ)

# உரிமைகளை பாதுகாக்கவே அரசாங்கத்தை ஆதரித்தோம்!

## முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள்!

கொழும்பு, நவ. 22

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பல்வேறு அசம்பாவிதங்கள் இந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றாலும் கூட, அவற்றை பேச்சுகள் மூலமாக இராஜதந்திர ரீதியில் தீர்வு காணவே முயற்சிக்கின்றோம். இதற்காகவே அரசாங்கத்தை ஆதரித்தோம் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம். பிக்கள் பாராளுமன்றில் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினர்.

ஹாரீஸ் எம். பி. தனது உரையில்,

முஸ்லிம் சமூகம் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத பல பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டம் உட்பட பல பிரச்னைகளுக்கு எமது சமூகம் முகம்கொடுத்து வருகின்றது, இந்நிலையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் என்ற வகையில் இந்த பிரச்னைகளுக்கு அரசாங்கத்துடன் பேசி தீர்த்து வைப்பதா அல்லது இந்த பிரச்னையை பேசி முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதா என்ற இரண்டு நிலைமையில் இருக்கின்றோம். எமது மூத்த முஸ்லிம் அரச தலைவர்கள் அன்று முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட பிரச்னைகளை அவர்கள் ஆளும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்த்த வரலாறு இருக்கின்றது.

அதேபோன்றுதான் தற்காலத்தில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலத்தில் கோவிட் தொற்றால் மரணித்த முஸ்லிம்களின் ஜனஸாக்களை எரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக நாங்கள் அனைவரும் குரல் கொடுத்தோம். 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்துக்கு வாக்கெடுப்புக்கு வந்தபோது ஆதரவளித்து எமது பிரச்னையை தீர்த்தோம்.

இதேவேளை, நஸீர் அஹமட் எம்.பி தனது உரையில்,

நாங்கள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவளித்த நாளில் இருந்து எங்களை விமர்சிக்க மாத்திரமே ஒரு சில கூட்டம் செயல்பட்டுக் கொண்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளை எவ்வாறு நாம் வெற்றிகொள்ள வேண்டும், அல்லது எவ்வாறு ஜனநாயக ரீதியிலே இராஜதந்திரமாக காய்நகர்த்த வேண்டும் என்பதை பற்றி புரிந்துகொள்ளாமல், நாட்டின் நிலைமைகளை புரிந்து கொள்ளாமல் வெறுமனே வெளியில் இருந்து பேசிக் கொண்டு இருப்பதால் மாத்திரம் எந்தவொரு பயனையும் அடைந்துவிட முடியாது.

எந்த இலாபத்திற்காகவும் இந்த அரசாங்கத்துடன் இணையவில்லை. - என்றார். (ஐ)

# மன்னாரில் எகிறுகிறது தொற்று நேற்று முன்தினம் 18 தொற்றாளர்!

மன்னார், நவ. 22

மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார். கடந்த 20 நாள்களில் மட்டும் 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்றும் அவர் கூறினார்.

மன்னார் மாவட்டத்தின் தொற்று நிலவரம் தொடர்பில் நேற்று அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மன்னார் மாவட்டத்தில், நேற்ற முன்தினம் புதிதாக, 18 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை, 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2,816 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டனர். மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# புதிய அரசியல் யாப்பு சாத்தியமா? 13 ஆவது திருத்தத்தின் 'கதி' என்ன?

வி. சிவலிங்கம்

இலங்கை அரசியலும், சமுகமும் மிக மோசமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. கொரொனா நோய்த் தாக்கங்களின் பின்னர் உலக நிலமைகளும் பாரிய அளவில் மாறி வருகின்றன. இந் நிலையில் பழைய அடிப்படைகள், கோட்பாடுகள், பொறிமுறைகள் என்பவற்றின் கீழ் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது என்பது பல விதங்களில் உணரப்பட்டு வருகிறது. தற்போது இலங்கை ஆட்சியாளர்கள் சிங்கள - பௌத்த பேராதிக்க சிந்தனைகளின் அடிப்படையில் நாட்டை எடுத்துச் செல்ல முயற்சிக்கின்ற போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளும், அரச தரப்பில் அதிகரித்துச் செல்லும் ஊழல், சட்ட ஒழுங்கு சீர்குலைவு, கட்சி மற்றும் தனிநபர் ஆதிக்கம் போன்றன அந்த நம்பிக்கைகளை மக்களிடம் ஏற்படுத்த தவறியுள்ளன. இந்த நிலையில் பாரிய ஏமாற்றங்களை இளைய தலைமுறையினரே அனுபவிக்கின்றனர்.

கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக குடி வரவு, குடி அகல்வு திணைக்களத்தில் குவிந்து வரும் இளைஞர் தொகை அந்த ஏமாற்றங்களை அடையாளப்படுத்துகிறது. அரச தரப்பினரின் அனுபவமற்ற முடிவுகள் பாரிய அளவில் மக்களின் வாழ்வினைப் பாதிப்பதை அவர்கள் உணரத் தவறுவதையும், அவற்றை இராணுவ ஒடுக்கு முறையின் மூலம் தடுக்கும் மனோபாவம் ஆட்சியாளர் மத்தியில் அதிகரித்து வருவதையும் மக்கள் தினமும் அனுபவிக்கின்றனர்.

மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத் தலையீடுகள் கட்டுப்பாடு என்ற பெயரில் அதிகரித்து மக்களின் சுயாதீன செயற்பாடுகளைத் தடுத்து வருகிறது. இவ்வாறான பாரிய நெருக்கடியின் பின்னணியில் தேசத்தின் எதிர்காலம் குறித்துக் கவலையடையும் பிரிவினர் மாற்றங்களைத் துரிதப்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அவ்வாறான ஒரு பின்னணியில்தான் சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயத்தையும் நாம் அவதானிக்க வேண்டும்.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அரசியல் அமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டில் ராணுவ தலைமையில் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளன. ஆனாலும் அரச தரப்பினர் எதிர்பார்த்தவாறு மாற்றங்கள் நிகழவில்லை. பதிலாக அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின் ஆளும் பொதுஜன பெரமுன தோல்வியடையும் என்பது பல தரப்பினராலும் உணரப்படுகிறது. அரச ஆளும் கூட்டணிக் கட்சிகள் மத்தியில் உள் முரண்பாடுகள் பகிரங்கமாக வெளிப்படுகின்றன. எனவே கப்பல் தாழப் போவதை அக் கட்சிகள் உணர்ந்துள்ளதாகவே நாம் கருத வேண்டும்.

இச் சிக்கலான பின்னணியில் இலங்கையில் பல வெளி நாடுகள், உள்நாட்டு முதலாளிகள் முதலீடு செய்துள்ளனர். தமது முதலீட்டிற்கான பலன்கள் கிடைக்குமா? என்பது குறித்து பல சந்தேகங்கள் எழுகின்றன. உள்நாட்டு நிலமைகள் கட்டுக்குள் இல்லையெனில் முதலீடுகள் வருவது குறைந்து விடுவதோடு ஏற்கெனவே முதலீடு செய்தவர்கள் மிக விரைவாக கடைகளைப் பூட்ட ஆரம்பித்து விடுவர். அவர்கள் ஒருபோதும் அரசைக் காப்பாற்றுவதை விட தமது முதலீடுகளையே காப்பாற்ற முயற்சிப்பர். இங்கு அரச தரப்பிலுள்ள முதலீட்டாளர்களும் விதிவிலக்கல்ல. எனவே, நாட்டு நிலமைகளை சீர் செய்ய அழுத்தங்களை மேற்கொள்கிறார்கள். இத்தகைய சிக்கலான



**"அடுத்த வருட ஆரம்பத்தில் வெளிவரப் போவதாகக் கருதப்படும் புதிய அரசியல் யாப்பு வெறுமனே இலங்கையின் தயாரிப் பாக இருக்கும் என கருத முடியவில்லை. சர்வதேச பங்களிப்பு நிறைய இருப்பதா கவே குறிப்பாக இந்திய அறிஞர்கள் இதில் பங்களித்திருப்பதாகவே கருதப்படுகிறது.**

பின்னணியிலிருந்தே புதிய அரசியல் யாப்புத் தொடர்பாக பேச வேண்டியுள்ளது.

தற்போது வரையப்படுவதாகக் கூறப்படும் யாப்பு யாரால் வரையப்படுகிறது? என்பது பலருக்கும் சந்தேகமாகவே உள்ளது. பல அமைச்சர்களும் தமது சந்தேகங்களை வெளியிட்டு வருகின்றனர். இந் நிலையில்தான் சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர்கள் அமெரிக்கா செல்கிறார்கள். புதிய அரசியல் யாப்பின் உள்ளடக்கம் குறித்து எதுவும் தெரியாமல் இவர்கள் அமெரிக்கா செல்ல வாய்ப்பு இல்லை. அதுவும் நிபுணர்கள் செல்ல வாய்ப்பு இல்லை. எனவே வரையப்படும் புதிய அரசியல் யாப்புத் தொடர்பாக ஏதோ தெரிந்த பின்னணியில்தான் அவர்கள் அங்கு செல்கிறார்கள். இவ்வாறான அனுமானம் எந்தப் பின்னணியில் எழுகிறது? என்பதனை ஆராய்வோம்.

சமீபத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பினர் 13ஆவது திருத்தமே தற்போதைய நிலையில் சாத்தியமானது எனவும், சகல கட்சிகளும் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுலாக்கும்படி அரசைக் கோர வேண்டும் என்ற அடிப்படையில் சந்தித்தனர். ஆனால், அக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளவில்லை. தாம் புதிய அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்து அரசிடம் கையளித்துள்ளதாகவும். அவை 13ஆவது திருத்தத்திற்கு மேல் சென்றுள்ளதாகவும் அதன் காரணமாகவே அதனை வற்புறுத்தும் தீர்மானத்தை ஆதரிக்க முடியவில்லை என்ற விளக்கமும் வழங்கப்பட்டது. அவ்வாறாயின் அரசின் புதிய அரசியல் யாப்பு வரைபு குறித்து தமிழ் அரசுக் கட்சி அறிந்துள்ளது என்பதை நாம் காணலாம்.

இம் மாதிரியான அணுகுமுறைகள் 2015 - 2019 ஆண்டு காலத்தில் புதிய யாப்பு வரைய முற்பட்ட வேளையில் நடைபெற்றுள்ளன. உதாரணமாக, இலங்கை அரசிற்கு எதிராக ஜெனிவா தீர்மானங்கள் வரலாம் என்பதை எதிர்பார்த்து மைத்திரி - ரணில் அரசு கூட்டமைப்புடன் தீவிர பேச்சுகளை நடத்தியது. அப்போது வெளிநாட்டமைச்சராக இருந்த மங்கள சமரவீர கூட்டமைப்புடன் நெருங்கிச் செயல்பட்டார்.

இப் பேச்சுகளின் விளைவாகவே அமெரிக்கா தலைமையிலான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறியது. கடந்த 10 ஆண்டுகளில் இவ்வாறான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அவற்றில் மாவை, சுரேஷ், சுமந்திரன், சம்பந்தன், செல்வம் போன்றவர்கள் அமெரிக்கா சென்று பேசியுள்ளனர். இருப்பினும் தற்போது வேறு நிலமைகள் தோன்றியுள்ளன. சீனாவின் தொடர்புகள், முதலீடுகள், தலையீடுகள் முன்னெப்போதையும் விட இலங்கையில் அதிகரித்துள்ளது. இத் தலையீடுகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பினும் இலங்கையைப் பயமுறுத்திப் பணிய வைக்க இந்தியா விரும்பவில்லை.

ஏனெனில், இந்தியாவிற்கு அண்மித்த சிறிய நாடுகள் இவ்வாறான பயமுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளாது. அது இந்திய வெளிநாட்டுக் கொள்கைக்குப் பெரும் பாதகமாக அமையலாம். எனவே தற்போது இந் தியா 'குவாட்' எனப்படும் ராணுவக் கூட்டில் இருப்பதால் ஏனைய நாடுகள் அப் பிரச்னையைக் கையாழுகின்றன.

தற்போதைய நிலையில் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து செயற்படுவதால் இலங்கை தொடர்பான பிரச்னைகளில் தற்போது அமெரிக்க தலையீடு அதிகரித்துள்ளது. அத்துடன் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சரிந்து செல்வதால் இலங்கை ஒரு நாட்டின் உதவியில் மட்டும் தொடர்ந்து வாழ முடியாது. அது மட்டுமல்ல, இலங்கையில் சீன எதிர்ப்பும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இவை தேர்தல் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அரசாங்கம் படிப்படியாக தனது பாதையை மாற்ற எத்தனிக்கிறது. அரசினால் தற்போது தயாரிக்கப்படும் புதிய அரசியல் யாப்பின் உள்ளடக்கம் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியிடப்படுகின்றன. குறிப்பாக தற்போதைய அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தின் எதிர்காலம் என்ன? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு 40 ஆண்டுகளாகிய நிலையில் அதன் செயல்பாடு வடக்கு, கிழக்கில் மிக மோசமாகவே உள்ளது. 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோது அதன் பிரதான நோக்கம் தேசிய இனப் பிரச்னைக்கான நிரந்தர தீர்வை எட்டுவதற்கு 13ஆவது திருத்தம் ஆரம்ப மாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பே காணப்பட்டது. ஆனால், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அதனை அமுல்படுத்தாமல் இழுத்தடித்து மாகாணசபை களை பலமிழந்த ஒன்றாக மாற்றிய நிலையில் 13ஆவது திருத்தம் தேவையா? என்ற அளவிற்கு இன்று விவாதங்கள் எழுந்துள்ளன.

தமிழர் தரப்பிலும் 13ஆவது திருத்தம் குறித்து காத்திரமான நிலைப்பாடுகள் இல்லை. குறிப்பாக தமிழர் கூட்டமைப்பினர் தாம் அதை விட அதிகளவு உயரத்திற்கு சென்றுள்ளதாக நம்பகின்றனர். அதாவது சிங்கள அரசியல் தலைமைகள் கொள்கை அளவில் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்றுள்ளதாக கருதுகின்றனர். இவை அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற போராட்டமே எஞ்சியிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இங்கு 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன? அதனை நீக்க இந்தியா அனுமதிக்குமா? என்ற கேள்விகள் எழுகின்றன. இங்கு 13ஆவது திருத்தம் இந்தியாவினுடையது அல்ல. அது இலங்கையின் தயாரிப்பு. அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கையால் தயாரிக்கப் பட்டதாகும். அவ்வாறாயின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு ஏற்றவாறான புதிய திருத்தம் கொண்டுவரப்படு மானால் அதனை இந்தியாவும், தமிழ் தலைமைகளும் ஏற்றுக் கொள்ளுமா னால் புதிய 13ஆவது திருத்தத்திற்குப் பதிலான புதிய ஏற்பாடு வரலாம். இங்கு இப் பிரச்னை குறித்து மேலும் ஒரு விபரத்தை தரலாம்.

தற்போது இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவராக மிலிந்த மொறகொட அமைச்சரவை அந்தஸ்து கொண்ட ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமெரிக்காவுடன் மிக நெருங்கிய தொடர்புள்ளவர். இவர் 13ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை உடையவர். அவரது தலைமையில் இயங்கும் 'Path finder foundation' என்ற நிறுவனம் இலங்கையின் எதிர்காலம் குறித்து புதிய சிந்தனை என்ன? என்பது குறித்து கருத்துகளை வெளியிட்டுள்ளது. அரசாங்கத்தில் மிகவும் தொடர்புடைய அவர் இலங்கையின் இன்றைய நிலமை குறித்தும் அதன் எதிர்காலம் குறித்தும் பின்வருமாறு கூறுகிறார்.- இலங்கையிலுள்ள பல மட்டங்களிலும், சமூகத்திலும் உள்ள தலைவர்கள் காலாவதியாகி விட்ட கொள்கைகளையும், வழிமுறைகளையும் கொண்டுள்ளனர்.- அவற்றில் தொழில்நுட்பத்துடன் இணைந்த பாரிய மாற்றம் 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறான வகையில் தேவை.- நாட்டில் மிக மோசமான, நம்பிக்கையற்ற சூழல் காணப்படுவதால் ஏற்பட்டுள்ள வெறுப்புக் காரணமாக நாட்டை விட்டு பலர் வெளியேறுகின்றனர். (11 ஆம் பக்கம் பார்க்க)


சூர்யா

# சினிமாவில் ஓர் அரசியல் சங்கதி

## ‘ஜெய்பீம்’ ஏவுகணைகள்

பகவான் சிங்

இல்லை, இது தேநீர் இல்லை, கடுங்காப்பி. பனைவெல்லம் சேர்க்கும்போது அதன் சுவை இன்னும் கூடிவிடுகிறது. இந்த இதமான திங்கட்கிழமையின் காலை உணவாக பிட்டும் கடலையும் காத்திருக்கின்றன. ஒரு வாரத்துக்கும் மேலாகப் பெய்து இம்சித்த தொடர் மழையிலிருந்து விடுதலையாக சூரிய ஒளி வந்திருக்கிறது. வேத ஜோசியரும் வானிலை அறிஞருமான என் நண்பர் ராமச்சந்திரன், நவம்பர் 25ஆம் திகதியிலிருந்து மீண்டும் மழை பெய்யும் என்று மிரட்டுகிறார்.

‘ஜெய் பீம்’ சர்ச்சையைப் பற்றியும், பாட்டாளி மக்கள் கட்சியின் இளவரசர் இந்தத் திரைப்படம்பற்றிக் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்ததைப்பற்றியும் உங்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். இயக்குநரும் தயாரிப்பாளருமான பாரதிராஜா, அன்புமணிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் சகிப்புத்தன்மையைப் பற்றிப் பேசிய அவர், ஒரு திரைக் கலைஞருக்குப் படைப்பு சுதந்திரம் தேவை என்றும், அது இல்லாவிட்டால் கலை உலகம் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் கூறினார். “தனது ‘ஸ்க்ரிப்ட்டை’ வைத்துக்கொண்டு ஒரு தயாரிப்பாளர் ஒவ்வோர் அரசியல்வாதி, சாதித்தலைவர் வீட்டுவாசலிலும் நின்று அனுமதி பெறவேண்டுமானால் எப்படிப் படம் எடுப்பது?” என்று கேள்வி எழுப்பினார். பலரும் பாரதிராஜாவுக்கு ஆதரவு தெரிவித்தனர். தனது கட்சியின் அதிகாரபூர்வ நாளிதழான ‘முரசொலி’யில் ஜெய்பீம் படத்திற்கு ஆதரவாக ஒரு நீண்ட கட்டுரையைத் தி. மு. க. வெளியிட்டது. அது சூர்யாவுக்கு பெரிய பலமாக இருந்திருக்க வேண்டும். நவம்பர் 16ஆம் திகதி வெளியான முரசொலி கட்டுரையில், ‘கட்சியின் சின்னமான மாம்பழம் வில்லன் வீட்டில் இருப்பதுபோல் காட்டியிருந்தாலோ, அன்பு, ஐயா, மூர்த்தி, மணி, போன்ற பெயர்களை எதிர்மறைக் கதாபாத்திரங்களுக்கு வைத்திருந்தாலோகூட பா. ம. க அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்’ என்று சாடப்பட்டிருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்புமணியின் பதில் ஏவுகணை மழை பாய்ந்தது. சகிப்புத்தன்மை, படைப்பு சுதந்திரம் குறித்த பாரதிராஜாவின் கருத்துக்களை சாடிய அன்புமணி, தனது தந்தையும் பா. ம. க நிறுவனருமான மருத்துவர் ராமதாஸ், சமூக நலனுக்காக செய்த சிறப்புகளைப் பட்டியலிட்டார். பின்தங்கிய வகுப்பினருக்கும் தலித்துகளுக்கும் இடையே நடக்கும் மோதல்களை உணர்ச்சியைத் தூண்டும்விதமாக சித்தரிப்பதன் மூலம் தெற்கு தமிழகத்தில் சாதிப்


அன்புமணி ராமதாஸ்

பிரச்னை வருவதற்கு திரைப்படத்துறை முக்கிய காரணமாக இருக்கும்போது, தங்கள் கட்சியும் வன்னியர்களும் பெரும்பான்மையாக இயங்கும் வட தமிழகத்தில் மருத்துவர் ராமதாஸ் சாதி ரீதியான பிரச்னைகளைக் குறைத்து 40 ஆண்டுகளாக அமைதி நிலவச் செய்கிறார் என்று, பாரதிராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் அன்புமணி கூறினார். அது மிகவும் காட்டமான நீண்ட கடிதம், மனதின் ஆழத்திலிருந்து அதில் எழுந்த அம்பு எதிரியின் தலையை நோக்கிப் பாய்ந்தது.

“ஜெய்பீம் திரைப்படத்தில் சாதிவெறி பிடித்த, கொடுமைக்கார, ‘சைக்கோ’ காவல் உதவி ஆய்வாளர் (வில்லன்) இல்லத்தில் மாட்டியிருக்கும் கலண்டரில், வன்னியர்களின் அடையாளமான அக்னி


ஸ்ராலின்

குண்டம் இல்லாமல் நீங்கள் போற்றி வணங்கும் தேசியமும், தெய்வீகமும் எனது இரண்டு கண்கள் என்று முழக்கமிட்ட முத்துராமலிங்க தேவரின் படம் இருந்தால் நீங்களும், தேவர் சமுதாயமும் சும்மா இருப்பீர்களா? அல்லது கொங்கு மக்களால் கடவுளுக்கு இணையாக வழங்கப்படும் வீரத்தின் விளைநிலம் தீரன் சின்னமலையின் உருவப்படம் அச்சிடப்பட்ட நாட்காட்டி இருந்திருந்தால் அவர்கள் கொதித்து எழுந்து இருக்கமாட்டார்களா? அண்ணல் அம்பேத்கரின் புகைப்படம் இருந்திருந்தால் என்னவாகி இருக்கும்? படைப்புச் சுதந்திரம் என்று சும்மா இருந்திருப்பீர்களா?” என்று பா. ம. க. வின் இளவரசர் சவால் விட்டார். தென் தமிழகத்தில் தேவர்களும் கிழக்கு தமிழகத்தில் கொங்கு மக்களும் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரும் ஒடுக்கப்பட்டவர்களின் தலைவருமான டாக்டர் அம்பேத்கரை தலித்துகள் கடவுளாகப் போற்றுகிறார்கள். தமிழகத்தின் மக்கள் தொகையான 8.5 கோடியில் 20 வீதம் உள்ள தலித்துகள் தமிழகம் முழுக்க வசிக்கிறார்கள்.

**தொடர்ந்து பாய்ந்தன அம்புகள்**

“வானளாவிய படைப்புச் சுதந்திரம் நடிகர் சூர்யாவுக்கு மட்டும்தானா? இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க முனைந்த நடிகர் விஜய் சேதுபதிக்கு அந்தப் படைப்புச் சுதந்திரம் மறுக்கப்பட்டது ஏன்? கடுமையான கண்டனக் கடிதத்தைத் தாங்கள்தான் எழுதியிருந்தீர்கள், நினைவு இருக்கிறதா?

“சமீபத்தில் வெளியான Family Man- II தொடர் முழுவதும் தடைசெய்ய வேண்டுமென்று கடுமையான எச்சரிக்கை விடுத்தீர்கள். அப்பொழுது எங்கே போயிற்று உங்கள் படைப்புச் சுதந்திரம்? அண்மையில் வெளியான ‘கர்ணன்’ படத்தில் 1997ஆம் ஆண்டு என்று இருந்ததை மாற்றி, ‘1990-களின் இறுதியில்’ என்று போட வைத்தபோது, என்னவாயிற்று உங்கள் படைப்புச் சுதந்திரம்?

“படைப்புச் சுதந்திரம் என்ற பெயரில் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் இழிவுபடுத்தும் வகையில் வன்னியர்களுக்கு புனிதமான அக்னி குண்டத்தை வைத்து சத்ரியர் என்ற அடிக்குறிப்பு போட்டு கொலையாளிகளாகக் காண்பித்தால் அதற்கு நீங்களும், திரைத்துறையினரும் ஆதரவு அளிக்கிறீர்களா?”

ஜெய்பீம் இயக்குநர் ஞானவேல் இன்று வெளியிட்ட ருவிட்டர் செய்தியில், கிளம்பிய சர்ச்சைகளுக்காக அவர் வருத்தம் தெரிவித்திருந்தார். அது மிகவும் சிறப்பாக அமைந்தது. இதற்கு மேல் இந்த சர்ச்சையை ‘எதிரணியினர்’ கைவிடுவார்கள் என்று நம்புவோம். அந்த ருவிட்டர் வருத்தச் செய்தியில் இயக்குநர் கூறியிருந்தது இதுதான்:

“ஜெய்பீம் திரைப்படத்திற்கு எல்லா தரப்பினரிடமிருந்தும் கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சி அளித்தது. அதேபோல, இத் திரைப்படத்திற்கு எழுந்த சில எதிர்மறைக் கருத்துக்கள் நான் சற்றும் எதிர்பாராதவை.


பின்னணியில் மாட்டப்படும் ஒரு காலண்டர் படம், ஒரு சமூகத்தைக் குறிப்பதாகப் புரிந்து கொள்ளப்படும் என நான் அறியவில்லை. 1995 காலத்தைப் பிரதிபலிப்பதே அந்த கலண்டரின் நோக்கமே அன்றி, குறிப்பிட்ட சமூகத்தின் குறியீடாக அதைக் காட்ட வேண்டும் என்பது எங்கள் யாருடைய நோக்கமும் அல்ல.

நவம்பர் மாதம் முதலாம் திகதி இரவு அமேசனில் படம் வெளிவந்ததும், கலண்டர் படம் பற்றி சமூக வலைத் தளங்களின்மூலம் அறிந்தவுடன், உடனடியாக நவம்பர் 2ஆம் திகதி காலையே அதை மாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. யாரும் கேட்பதற்கு முன்பே அந்த கலண்டர் படம் மாற்றப்பட்ட பிறகு, எங்களுக்குத் தனிப்பட்ட உள்நோக்கம் இல்லை என்பது எல்லோருக்கும் புரியும் என்று நம்பினேன்.

இத்திரைப்பட ஆக்கத்தில் எந்தவொரு தனிப்பட்ட நபரையோ, எந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தையோ அவமதிக்கும் எண்ணம் சிறிதளவும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதன் பொருட்டு மன வருத்தம் அடைந்தவர்களுக்கும் புண்பட்டவர்களுக்கும் என் உளப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று ஞானவேல் கூறினார்.

ஜெய்பீம் விவகாரத்தில் பா. ம. க. வுக்கு எதிராக கருத்து சொன்ன தி. மு. க. பத்திரிகை முரசொலியின் கட்டுரையில் ஓர் அரசியல் சங்கதி உண்டு என்று பலர் பேசினர். “இதனால் தி. மு. க இனிமேல் பாமகவோடு கூட்டணி வைக்காது” என்றும், “பா. ம. க. வின் எதிர்க்கட்சியான தலித் மக்களின் விடுதலை சிறுத்தைகளோடு தி. மு. க வின் உறவு இன்னமும் வலுவடையும்” என்றும் கூறப்படுகிறது. அதாவது, ஏற்கனவே வலுவாக இருக்கும் தி. மு. க, - வி. சி. க கூட்டணியை உறுதிப்படுத்தியதோடு, எதிர்காலத்தில் தி. மு. க - பா. ம. க. கூட்டணி உருவாக எந்த வாய்ப்பும் இல்லை என்பதையும் முர சொலி கட்டுரை அழுத்தமாகக் காட்டியுள்ளது. பா. ம. கவுக்கும் பா. ஜ. கவுக்கும் உள்ள உறவையும் இது உறுதியாகக் கூறியுள்ளது, ஏனென்றால், பா. ஜ. க. தலைவர்கள் ஜெய்பீம் திரைப்படத் திற்கு எதிராகக் காட்டமான அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். பாட்டாளி மக்களுக்கும் தலித்துகளுக்கும் இடையே உள்ள நீண்டகால பூசல் காரணமாகவே பா. ம. க. இந்தத் திரைப்படத்தை எதிர்த்தது என்று சொல்லப்பட்டாலும், ஒடுக்கப்பட்டவர்களை அரசியலில் இருந்து விலக்குவதான பா. ஜ. கவின் மேட்டுக்குடி மனப்பான்மையையே ஜெய்பீம் எதிர்ப்பு காட்டுகிறது என்று விமர்சகர்கள் தெரிவித்தனர்.

இடதுசாரி மனப்பான்மை உள்ள சிந்தனாவாதிகளால் தனக்கு எதிராகப் பரப்பப்படும் சமூக ஊடக மீம்களைப் பற்றிக் கண்டுகொள்ளாத பா. ஜ. க தலைவர் அண்ணாமலை, தொடர்ந்து தி. மு. க அரசின்மீது விமர்சனத் தாக்குதல்களை நடத்திவருகிறார். ஒன்றன்மேல் ஒன்றாக குற்றச்சாட்டுகளை வைத்து அடுக்குகிறார். மத்தியில் உள்ள பா. ஜ. க அரசோடு கசப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் அண்ணாமலைக்கு எதிர்க் கருத்துக்கள் வைக்கும்போது கவனமாக இருக்கும்படி ஸ்டாலின் தனது கட்சியினரிடம் தெரிவித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முந்தைய பா. ஜ. க. தலைவர்கள் பெரிய அளவில் செயல்படவில்லை என்பதால் அண்ணாமலை தலைவரானபோது யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், இப்பொழுது செய்தி ஊடகங்கள் அவரது அறிக்கைகளை உன்னிப்பாக கவனிக்கின்றன. ஸ்டாலின் நிர்வாகத்தின் சில அதிகாரிகளிடமிருந்து வரும் செய்திகளின் அடிப்படையிலேயே


அண்ணாமலை

அண்ணாமலையின் விமர்சனங்கள் அமைகின்றன என்று ஊடகவியலாளர்களுக்குத் தெரிகிறது.


அலுப்பான அரசியலுக்கு பதிலாக ஜெய்பீம் பற்றிப் பேசுவேன் என்று கூறியிருந்தேன். ஆனால், மீண்டும் அரசியல் குட்டைக்குள் வழுக்கிவிட்டடேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசியலும் சினிமாத்துறையும் பல ஆண்டுகளாகவே பின்னிப் பிணைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். நல்ல பொழுதுபோக்கு. நிறைய சோகம்.

வரவிருக்கும் வாரம் உங்களுக்கு சிறப்பானதாக அமையட்டும். வணக்கம்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

22)  இவ் உருவில் நிறந்தீட்டப்படாத பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

……………………………………………………………………

23) முற்றாக நிரம்பியிருந்த ஒரு நீர்த்தொட்டியிலிருந்து 1275*l* நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. தொட்டியில் எஞ்சியிருக்கும் நீரின் அளவ 3725*l* ஆகும். நீர்த்தொட்டி முற்றாக நிரம்பியிருந்த போது அதில் இருந்த நீரின் அளவு யாது?

……………………………………………………………………

24) 4m 80cm நீளமுள்ள ஒரு பூப்பாத்தியை மறுபடியும் அமைத்த போது அதன் நீளம் 7m 25cm ஆக இருந்தது அதன் அதிகரித்த நீளம் யாது?

……………………………………………………………………

25) 750g சீனியின் விலை ரூபாய் 105.00 எனின் 1kg250g சீனியின் விலை யாது?

……………………………………………………………………

26) விமல் 15km50m தூரத்தை பேருந்திலும் 8km90m தூரத்தை முச்சக்கரவண்டியிலும் பயணம் செய்தான் அவன் பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?

……………………………………………………………………

27) ஒருவர் 612 அரிசிச் சாக்குகளை 6 லொறிகளில் சம எண்ணிக்கைகளில் ஏற்றினார். ஒரு லொறியில் உள்ள அரிசிச் சாக்குகளின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………

28) 127, 136, 145, 154, ……., …… என்ற எண்கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.

……………………………………………………………………

29)

| | |
|---|---|
| 49 | 40 |
| 75 | 35 |
| 21 | 77 |

கட்டத்தில் உள்ள எண்களுள் 7 இன் மடங்குள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

……………………………………………………………………

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

30) உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் "நான் பாடசாலைக்கு ஒளியாவேன்" இடம்பெறுவது எத்தனையாவது படிமுறையில் ஆகும்.
(1) படிமுறை 2 (2) படிமுறை 3 (3) படிமுறை 5

31) தேசிய மரபுரிமையாக மட்டுமன்றி உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ளது எது?
(1) பொம்மலாட்டம் (2) கற்செதுக்கல்கள் (3) மகாபோதி விருட்சம்

32) பின்வருவனவற்றுள் அரச நிறுவகம் அல்லாதது எது?
(1) சிறப்பு அங்காடி
(2) நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை
(3) பொலிஸ் நிலையம்

33) ஆணிவேர் உள்ள தாவரம் எது?
(1) பப்பாசி (2) வாழை (3) கமுகு

34) இலங்கைக்கே உரித்தான தாவரம் எது?
(1) தென்னை (2) இறப்பர் (3) எண்ணை


35) அனைத்துமுண்ணி, ஊன்உண்ணி என்பவற்றுக்குப் பொருத்தமான பிராணிகள் முறையே எவை?
(1) கோழி, தும்பி (2) நாய், மான் (3) காகம், முயல்

36) இலங்கைக்கே உரித்தான நகருயிர் எது?
(1) ஆமை (2) உடும்பு (3) நீர்ப்பாம்பு


37) புதிய தொழில்நுட்பத்தின் கீழ் மாற்றமடைந்துள்ள சமையல் உபகரணம் எது?
(1) திருகை (2) கனலடுப்பு (3) உரல்

38) ஞாயிற்றுக் கலங்கள் இயங்குவதற்குத் துணை புரிவது எது?
(1) சூரிய ஒளி (2) பெற்றோல் (3) எரிவாயு

39) நாம் உணவாக உட்கொள்ளத்தக்க பூ அல்லாதது எது?
(1) அகத்திப் பூ (2) பொன்னாவரைப் பூ (3) செவ்வரத்தைப் பூ

40) படத்தில் காட்டப்பட்டுள்ளதன் பெயர் யாது?

(1) மின்காந்தம்
(2) மின்சுற்று
(3) நீர்ச் சுழலி

41) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) மேல் மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) தென்மாகாணம்

42)  இதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன?
(1) பாலம் (2) புகையிரப்பாதை (3) சிறுவீதி

43) முற்காலத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்புக்காகக் கையாளப்பட்ட பாரம்பரியமான உத்திமுறை எது?
(1) நீர்ப்பாய்ச்சுதல்
(2) நிலத்தைப் பண்படுத்துதல்
(3) கிலுக்கி அமைத்தல்

# பயங்கரவாதிகளை நினைவேந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## மாவீரர் வாரம் தொடர்பில் பீரிஸ் கருத்து

கொழும்பு, நவ. 22

**"போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர அரசு ஒருபோதும் தடைவிதிக்கவில்லை. ஆனால், போரில் உயிரிழந்த பயங்கரவாதிகளை நினைவேந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படவேண்டும் எனில் பயங்கரவாதிகளை நினைவுகூருவது முறையற்ற செயலாகும்."**



- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஏன் அனுமதி வழங்கப்படுவதில்லை என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நவம்பர் 27ஆம் திகதி பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூரும் நாள் என்று உலகுக்கே தெரிந்த விடயம். இந்தநிலையில் அவர்களை பொதுமக்கள் என்ற ரீதியில் நினைவேந்துவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் முற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சட்டத்தின் பிரகாரம் பொலிஸார் செயற்படுகின்றனர். அதற்கமைய பயங்கரவாதிகளை நினைவேந்துவதை தடை செய்வதற்காக பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவுகளைப் பெற்றுள்ளனர். இது எவரையும் பழிவாங் கும் நோக்கமல்ல. பொலிஸார் தமது கடமைகளை உரிய வாறு செய்கின்றனர். எனவே, எந்தச் சந்தர்பத்திலும் பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகளை நினைவுகூர எமது அரசு அனுமதி வழங்காது.

நல்லாட்சி அரசு பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி வழங்கிய காரணத்துக்காக எமது அரசு நாட்டின் சட்டத்தை மீறி செயல்படாது.

நல்லாட்சி அரசின் ஏற்றுக்கொள்ள முடியாத சில செயல்களால்தான் நாடு இன்று மோசமான நிலைக்கு வந்துள்ளது. நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் எமது அரசு ஈடுபட்டு வருகின்றது.

நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படவேண்டும் எனில் பயங்கரவாதிகளை நினைவுகூருவது முறையற்ற செயலாகும். இது இனங்களுக்கு இடையே பகைமையையே ஏற்படுத்தும்"

- என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் புலிகள் அமைப்புடனான பேச்சுக்கு அரச குழுவுக்கு தலைமை தாங்கியவர் ஜீ. எல். பீரிஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# மாவீரரை நினைவேந்த தடைபோடவே முடியாது

## கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 22

"எமது போராட்ட வரலாற்றில் எமது மக்களுக்காக - எமது மண்ணுக்காக - எமது அரசியல் உரிமைக்காக - சுதந் திரத்துக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த எங்களுக்கு உரிமையுண்டு. அதற்கு உங்களால் தடைபோட முடியாது. தடைபோடவும் கூடாது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஒன்றுகூடல்களுக்குப புதிதாக ஒரு தடை விதிக்கப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சியினர் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்த இருந்ததாலும் ஒரே கல்லில் இரு மாங்காய்களாக மாவீரர் வாரம் தமிழர் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாலும் இவற்றை புதிய சட்டம் மூலம் வர்த்தமானி ஊடாக தடுக்க அரசு முயற்சித்துள்ளது.

மாவீரர் வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கிலே மாவீரர்களின் உறவுகளால் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரத் தயாராகவுள்ள நிலையிலே வடக்கு, கிழக்கிலே உள்ள நீதிமன்றங்கள் அந்தந்த மாகாணங்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்டவர்களுக்கும் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கக்கூடாது ஒன்றுகூடக்கூடாது என்ற தடை உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கின்றன.

எங்களின் விடுதலைக்கு தங்களின் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை இங்கு மட்டுமல்ல உலக நாடுகளிலுள்ள தமிழர்களும் மாவீரர் வாரத்தில் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தவுள்ளனர். எனவே தான் இலங்கையில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க அரசு திட்டமிட்டு இவ்வாறான கொரோனா சுற்றறிக்கைகளைக் காட்டி தடை செய்கின்ற கேவலமான ஒரு ஆட்சியைத் தான் நாம் இங்கு பார்க்கின்றோம்.

ஆர்ப்பாட்டங்களில் இலட்சக்கணக்கான் மக்கள் பங்கேற்ற நிலையில் அங்கு எந்தவித கொரோனாத் தொற்றுக்களும் ஏற்படவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கில் எமது தியாகிகளுக்கு - மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப் புறப்படுகின்ற வேளையிலே இவ்வாறான தடைகள் போடப்படுகின்றன. மன்னார் மாவட்டத்திலுள்ள ஆட்காட்டி வெளியில் மாவீரர் துயிலும் இல்லத்திலுள்ள பிரதான பொதுச் சுடர் ஏற்றும் பீடம் சில காடையர்களால் காட்டுமிராண்டித்தனமாக உடைத்தெறியப்பட்டுள்ளது

- என்றார். (இ)

# புதிய அரசியல்...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தாவிடில் நிலைமைகளை மாற்ற முடியாது.- நாட்டின் இளைஞர்கள் நாட்டின் அபிவிருத்தியில் அர்த்தமுள்ள விதத்தில் பங்கு கொள்வது தடுக்கப்பட்டிருக்கிறது.- நாம் வாழும் சமூகத்தையும், அரசாங்கத்தையும், அரசியலையும், பொருளாதாரத்ததையும் நவீன மயப்படுத்த வேண்டும்.- வெறுப்பு என்பது அரசியல் கலாச்சாரத்தினை பல தசாப்தங்களாக தீர்மானித்திருக்கிறது.- இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்கும் வகையில் சகலரையும் உள்ளடக்கிய தேசிய திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

தற்போது செயற்படுத்தப்படும் நல்லிணக்கம் என்பது தவறாகப் புரியப்பட்டு சகலரையும் இணைக்கத் தவறியுள்ளது. இதன் காரணமாக அது தேசிய அளவில் சட்டபூர்வ நியாயாதிக்கத்தை இழந்துள்ளது.- நிலமைகள் தொடருமானால் மிக நீண்ட காலமாக தீர்க்கப்படாமலுள்ள பிரச்னைகள் மேலும் அநியாயங்களை இனங்கள், வர்க்கங்கள், மதப் பிரிவுகளிடையே வளர்க்கவே உதவும்.- எமது சமூகம் இனக் குழுமங்களாக, வர்க்க அடிப்படைகளில், மத ரீதியாக, மொழி, பூகோள மற்றும் அரசியல் வழிகளில் பிளவுற்று இருக்கிறது. இவ்வாறு இலங்கையின் பிரச்னைகளை அடையாளப்படுத்திய இச் சிந்தனை சகல பிரிவினரையும் உள்ளடக்கிய, அரசியல் சார்பற்ற, உள்நாட்டில் தயாரான நல்லிணக்க முயற்சியே பொருத்தமானது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறானால் 13ஆவது திருத்தத்திற்கு மாற்றான ஒன்று உள்நாட்டில் தயாராக வேண்டும் என்பதையே வற்புறுத்துகிறது. மேற்குறிப்பிட்டவாறான கருத்துகளுக்கு மத்தியில் தற்போது இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவராகவும், அமெரிக்க அரசில் காத்திரமான கவனிப்பையும் உடையவரான அவர் மாகாண சபைகள் தொடர்பாக முன்வைக்கும் கருத்துக்கள் தற்போது மிகவும் கவனத்திற்குரியன. ஏனெனில் புதிய அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தம் நீக்கப்படுமானால் மாற்றுத் தீர்வு என்ன? என்பதை அவதானித்தால் அவரது கருத்துப்படி மாகாணசபைகள் அரசாங்கத்திற்கு வருடாவருடம் 250 பில்லியன் ரூபாய்கள் எவ்வித மாற்றத்தையும் தராத பொறிமுறைக்கு விரயமாக்கப்படுவதாக முறையிடுகிறார். இப் பொறிமுறை நீக்கப்பட்டு இந்த அதிகாரங்கள் மாநகர சபைகள், பிரதேச சபைகள் போன்றவற்றிற்கு வழங்கப்படுவதோடு நிதி விவகாரமும் பரவலாக்கப்பட வேண்டும் எனவும், சிவில் சமூக அமைப்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும், அவை ஓர் இயக்கமாக வளர்க்கப்பட வேண்டும் என்கிறார். இங்கிருந்தே நாம் சுமந்திரன் தலைமையிலான நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயத்தை அவதானிக்க வேண்டும். இலங்கை விவகாரத்தை ஆரம்பத்தில் அமெரிக்கா மட்டுமே கையாண்டு வந்தது. நோர்வே நாடு இந்தியாவிற்கு விபரித்து வந்தது. ஆனால், தற்போது நிலமைகள் மாறியுள்ளன. இந்தியா சார்பில் அமெரிக்கா பிரச்னைகளைக் கையாளுகிறது.

நாம் இப் பிரச்னைகளைத் தொடர்ந்தும் பழைய பாணியில் அணுக முடியாது. தற்போது உலக நாடுகள் புதிய ஒழுங்கை நோக்கிச் சென்று வருகின்றன. பூகோள அரசியலும் மாற்றமடைந்து வருகிறது. இலங்கை ஆட்சியாளர்கள் தாம் எண்ணியவாறு பௌத்த - சிங்கள இராச்சியத்தை அரசியல் யாப்பு மாற்றங்களால் ஏற்படுத்த முடியாது. ஏனெனில் அவர்கள் உலக சமூகத்தோடு பல வகைகளில் இணைந்து செயற்படுவதானால் உள்நாட்டில் உலக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் மாற்றங்களைத் தர வேண்டும்.

ஒரு வேளை இன்றைய ஆட்சியாளர்கள் இவற்றை உதாசீனம் செய்யலாம். தமது கட்சி அரசியலைத் தக்க வைக்க இவ்வாறான கொள்கைகளைத் தொடரலாம். ஆனால், ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் கட்சி என்பது சகல மக்களின் ஜனநாயக உரிமைகளையும் மறுதலித்து செல்ல முடியாது. கட்சிகளின் அல்லது தனி நபர்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்ப நாட்டை எடுத்துச் செல்ல முடியாது. இன்று சகல நாடுகளும் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் நிலையில் சமூக விழுமியங்களும் உலக அளவில் ஒரே அடிப்படையிலேயே நோக்கப்படுகின்றன.

சமீப காலமாக சுமந்திரன் தலைமையிலான அமெரிக்க விஜயம் குறித்து பல்வேறு வியாக்கியானங்கள் வெளியாகி வருகின்றன. இவை யாவும் உலகின் புதிய மாற்றங்களை கவனத்தில் எடுப்பதாகவோ அல்லது இலங்கை ஆட்சியாளர்கள் மாற மாட்டார்கள் என்ற எண்ணத்தில் அபிப்பிராயங்களை வெளியிடுவதாகவே தெரிகிறது.

அடுத்த வருட ஆரம்பத்தில் வெளிவரப் போவதாகக் கருதப்படும் புதிய அரசியல் யாப்பு வெறுமனே இலங்கையின் தயாரிப்பாக இருக்கும் என கருத முடியவில்லை. சர்வதேச பங்களிப்பு நிறைய இருப்பதாகவே குறிப்பாக இந்திய அறிஞர்கள் இதில் பங்களித்திருப்பதாகவே கருதப்படுகிறது. தற்போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்திருக்கும் ஆட்சியாளர்கள் தமது கனவு இராச்சியங்களை யாப்பின் மூலம் ஸ்தாபிக்க முடியாது. உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் அடிப்படையிலேயே யாப்பினை வரைய முடியும். அரசியல் யாப்பு அந்த நாட்டிற்கு மட்டும் உரியது அல்ல. அந்த யாப்பு உலக நியதிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படாவிடில் எந்த நாடும் முதலீடுகளையோ அல்லது தொடர்புகளையோ மேற்கொள்ளாது.

எனவே, புதிய அரசியல் யாப்பு என்பது எவ்வாறு அமைதல் அவசியம் என்பது குறித்து நாம் பரந்த விவாதங்களை நடத்த வேண்டும். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக செயற்படுத்த முடியாத, அரசியல் கட்சிகளின் ஒருமித்த ஆதரவைப் பெற முடியாத 13ஆவது திருத்தத்தினை விட புதிய மாற்றம் ஏற்படுமாயின் அதனை ஏற்க நாட்டு மக்களும், குறிப்பாக தமிழ் சமூகமும் தயாராக இருக்க வேண்டும்.

**- அரங்கம்.**



## பயங்கவாத அமைப்பாக ஹமாஸை அறிவித்து தடை செய்கிறது பிரிட்டன்

லண்டன், நவ. 22

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து பலஸ்தீன விடுதலைக்காக போராடி வரும் போராளிக் குழுவான ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்யவுள்ளதாக பிரிட்டன் உள்துறை அமைச்சர் பிரித்தி பட்டேல் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தடை உத்தரவு குறித்து விவாதம் நடைபெற்று வருகிறது. பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் இந்தத் தடை நவம்பர் 26 முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை நடைமுறைக்கு வந்தால் பிரிட்டனில் பலஸ்தீன போராளிக் குழுவுக்கோ அந்த அமைப்பு சார்ந்த நபர்களுக்கோ ஆதரவளிப்பது, நிதி சேகரிப்பது, அவர்களின் சீருடைகளை அணிவது உள்ளிட்ட செயல்பாடுகள் குற்றமாகக் கருதப்படும்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அதிகபட்சம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்க முடியும்.

காசாவின் ஆட்சியை 2006ஆம் ஆண்டு ஹமாஸ் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ளது. இதில் இரு தரப்பும் போர்க் குற்றத்தில் ஈடுபட்டன என்று மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

இந்நிலையில் ஹமாஸ் போராளிக் குழுவின் மீதான தடை பிரிட்டனின் வணிக இராஜதந்திர நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. பிரிட்டனின் இந்நடவடிக்கை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு முழு ஆதரவு தெரிவிப்பதாக உள்ளது என ஹமாஸ் அரசியல் பிரிவு அதிகாரி சமி அபு விமர்சித்துள்ளார். பல்வேறு நாடுகளும் பிரிட்டனின் இந்த முடிவைக் கண்டித்துள்ளன. (ஐ)

## முதல் மின்சார கப்பல் நோர்வேயில் அறிமுகம்

ஒஸ்லோ, நவ. 22



நோர்வேயின் பிரபல உரத் தயாரிப்பு நிறுவனமான 'யாரா இன்ரர்நஷனல்' உலகின் முதல் மின்சார தானியங்கி சரக்கு கப்பலை அறிமுகம் செய்துள்ளது.

யாரா பிர்க்லாண்ட் என்று பெயரிடப்பட்டுள்ள 80 மீற்றர் நீளமான இந்த மின்சார தானியங்கி சரக்கு கப்பல், தெற்கு நோர்வேயின் போர்ஸ்கிரன்னில் உள்ள உற்பத்தி ஆலையிலிருந்து 14 கி. மீ. தொலைவில் பிரெவிக்கில் உள்ள ஏற்றுமதி துறைமுக முனையம் வரையிலான சரக்கு போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் இந்தக் கப்பல் இந்நிறுவனத்தின் 40 ஆயிரம் டீசல் வாகனங்களின் போக்குவரத்துக்கு மாற்றாக விளங்கும். இதனால், ஆண்டுக்கு ஆயிரம் தொன் காபன் வெளியேற்றம் குறையும். இதன்மூலம் நாட்டின் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சியில் யாரா நிறுவனத்தின் இந்தக் கப்பல் பெரும்பங்கு வகிக்கும் என்று அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்வெய்ன் தோர் ஹோல்ஸ்தர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐரோப்பாவில் தொற்றை தடுக்காவிடின் மார்ச்சுக்குள் 5 இலட்சம் பேர் பலியாவர்!

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, நவ. 22




**ஐரோப்பாவில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்காதுவிடின் மார்ச் மாதத்துக்குள் 5 இலட்சம் பேர் உயிரிழக்க நேரிடும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.**

ஐரோப்பாவில் வரலாறு காணாத அளவுக்கு தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பல நாடுகளில் ஊரடங்கு அமுலாகியுள்ளது. இந்த நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹோன்ஸ் குளுக் தெரிவித்தவை வருமாறு,

முகக் கவசம் அணிவது உடனடியாக வைரஸ் தொற்று எண்ணிக்கையை குறைக்க உதவும். குளிர் காலம் போதுமான அளவுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படவில்லை. இதனால், கொரோனா டெல்டா திரிபு பரவுவது எளிதாகும்.

கொரோனா தொற்று பரவல் அதிகரிப்பை சமாளிக்க தடுப்பூசி செலுத்துவதை அதிகரிப்பது அவசியமாகும். புதிய மருத்துவ சிகிச்சை முறைகளை செயல்படுத்துவதும் தொற்றை கட்டுப்படுத்த உதவும்.

கொரோனா தொற்று ஐரோப்பாவில் அதிக உயிரிழப்புக்கு மீண்டும் காரணமாகியுள்ளது. கட்டாய தடுப்பூசியை கடைசி வாய்ப்பாகக் கருத வேண்டும். அதற்கு முன் 'பாஸ்' போன்ற வழிமுறைகள் உள்ளன. இது சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு அல்ல. மாறாக தனிமனிதர்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான சாதனம் - என்றார். (ஐ)

# தொற்று கட்டுப்பாடுகளை எதிர்த்து ஐரோப்பாவில் வன்முறை வெடித்தது

ஆம்ஸ்ரர்டாம், நவ. 22

ஐரோப்பிய நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கோவிட் - 19 கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் அதிகரித்துள்ளன. சில நாடுகளில் இந்தப் போராட்டங்கள் வன்முறையாக மாறியுள்ளன.

நெதர்லாந்தில், சனிக்கிழமை தொடக்கம் முடக்க கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தது. உணவகங்கள், மதுபான விடுதிகள் இரவு 8 மணியுடன் பூட்டப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தலைநகர் ஆம்ஸ்ரர்டாமில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நடத்திய போராட்டம் வன்முறையானது. இது பல நகரங்களுக்கும் பரவியது. இதனால், பொலிஸார் வன்முறைகளை தடுக்க துப்பாக்கி சூடுகளை நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

இந்த வன்முறைகள் நெதர்தலாந்தின் பல நகரங்களில் இரண்டாவது முறையாக சனிக்கிழமை இரவு வெடித்தன.

போராட்டக்காரர்களை விரட்ட பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி சூடுகளை நடத்தினர். பதிலுக்கு எதிர்ப்பாளர்கள் பட்டாசுகளை வீசி பொலிஸாரை தாக்கினர். இதைத் தொடர்ந்து பொலிஸார் தடியடி நடத்தி அவர்களை விரட்டினர். அத்துடன், அவர்கள் பயணித்த சைக்கிள்களுக்கும் தீ வைத்தனர் என்று கூறப்படுகின்றது.

ஆனால், ரோட்டர்டாம் நகரில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐவர் காயமடைந்தனர்.



இதையடுத்து, பொலிஸார் எதிர்ப்பாளர்களை நோக்கி நடத்திய துப்பாக்கி சூட்டில் 3 பேர் காயமடைந்தனர். 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, ஆஸ்திரியா, குரோஷியா, இத்தாலி, பிரான்ஸ் நாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். புதிய தடைகளால் மக்களின் கோபம் அதிகரித்துள்ளது.

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் பல்லாயிக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். 2022 பெப்வரி முதல் ஆஸ்திரியா தடுப்பூசியை கட்டாயமாக்க திட்டமிட்டுள்ளது. தடுப்பூசியை சட்ட பூர்வமாக்கிய முதல் ஐரோப்பிய நாடு இதுவாகும்.

தவிர, இன்று திங்கட்கிழமை முதல் 20 நாள் பொது முடக்கத்தையும் அந்த நாடு பிரகடனப்படுத்தியுள்ளது. இதனால், அத்தியாவசிய கடைகள் தவிர அனைத்தையும் மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குரோஷியாவில் பொதுத்துறை ஊழியர்களுக்கு கட்டாய தடுப்பூசி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக தலைநகர் ஜாக்ரெப்பில் பேரணி இடம்பெற்றது.

இத்தாலியில் பணியிடங்களில் பாஸ் நடைமுறையை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் போராட்டங்களை நடத்தினர்.

பிரான்ஸிலும் 'பாஸ்' நடைமுறையை காரணம் காட்டி எதிர்ப்புகள் வெடித்தன. ஒரே இரவில் நடந்த கலவரங்களில் பல கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. வணிக நிலையங்கள் பல எரியூட்டப்பட்டுள்ளன. கலவரங்களை கட்டுப்ப டுத்த அந்தப் பகுதிகளுக்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டுள் ளனர். (ஐ)

# முதல் பெண் ஜனாதிபதியாக 85 நிமிடங்கள் பதவியில் கமலா!



வாஷிங்டன், நவ. 22

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சத்திர சிகிச்சை செய்தமையால், அவர் மயக்கத்தில் இருந்த ஒன்றரை மணி நேரம் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் உபஜனாதிபதி கமலா ஹரிஸுக்கு வழங்கப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதி பொறுப்பு தற்காலிகமாக கமலா ஹரிஸுக்கு வழங்குவது தொடர்பான அதிகார பூர்வ கடிதம் அமெரிக்க பாராளுமன்றத்திற்கு நேற்று காலை அமெரிக்க நேரப்படி 10:10க்கு அனுப்பப்பட்டதாக வெள்ளை மாளிகை அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

57 வயதான கமலா ஹரிஸ் 85 நிமிடங்கள் அமெரிக்க ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தை தன்வசம் வைத்திருந்தார். குறைந்த நேரம் அதிகாரத்தில் இருந்தாலும் கூட இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதிக்கான அதி காரத்துடன் இருந்த முதல் பெண் என்ற பெருமை கமலா ஹரிஸுக்கு கிடைத்துள்ளது.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் பைடன் ஆரோக்கியமாக இருக்கிறார் என்றும், அவரால் தனது கடமைகளைச் செய்ய முடியும் என்றும் தலைமை மருத்துவர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இதன் பின்னரே பைடன் வசம் மீண்டும் ஜனாதிபதி அதிகாரம் கைமாறியது. (ஐ)

# திமுத் கருணாரத்ன சதம் இலங்கை வலுவான ஆரம்பம்!

காலி, நவ. 22

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக திமுத் கருணாரத்ன அடித்த அபார சதத்தால் இலங்கை அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் விக்கெட்களை இழந்து 267 ஒட்டங்களை குவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பதும் நிஷங்க, அணித் தலைவர் கருணாரத்ன இணை தொடக்கம் கொடுத்தது. அபாரமான ஆரம்ப இணைப்பாட்டத்தை இருவரும் ஏற்படுத்தினர்.

118 பந்துகளை சந்தித்த கருணாரத்ன, 5 பௌண்ட்ரிகளுடன் அரைச்சதம் கடந்தார். அவரைத் தொடர்ந்து 133 பந்துகளை சந்தித்து பதும் நிஷங்க அரைச்சதம் அடித்தார்.

56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பதும் நிஷங்க ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஒஸத பெர்னாண்டோ 3 ஓட்டங்களே தாக்குப்பிடித்தார். அவரைத் தொடர்ந்து வந்த அஞ்சலோ மத்தியூஸூம் 3 ஓட்டங்களையே எடுத்து ஆட்டமிழந்தார்.




இதனிடையே, 212 பந்துகளை எதிர்கொண்ட கருணாரத்ன 12 பௌண்ட்ரிகளுடன் சதம் கடந்தார். இது அவரின் 13ஆவது டெஸ்ட் சதமாகும்.

நான்காவது விக்கெட்டுக்காக கருணாரத்னவுடன் இணைந்த தனஞ்சய டி சில்வா, அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால், நேற்று முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது, இலங்கை அணி 88 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது.

திமுத் கருணாரத்ன 132 ஓட்டங்களுடனும், தனஞ்சய டி சில்வா 56 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இலங்கையின் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்க செய்வதற்கு முடியாமல் மேற்கிந்தியாவின் பந்துவீச்சாளர்கள் நேற்று திணறினர். அந்த அணியின் தலைவர் கிராக் பிராத்வெயிற் 8 பந்துவீச்சாளர்களை நேற்று பயன்படுத்தினார். றோஸ்ரன் சேஸ் 2 விக்கெட்களையும், ஷன்னோன் கப்ரியால் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம்நாள் ஆட்டமாகும். (ஐ)



## திமுத் அடித்த பந்து தாக்கியதில் மேற்கிந்தியாவின் வீரர் காயம்!

காலி, நவ. 22

திமுத் கருணாரத்ன அடித்த பந்து தாக்கியதில் மேற்கிந்தியத் தீவுகளின் அறிமுக வீரர் ஜெரமி சொரோசனோ காயமடைந்தார்.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகளின் முதல் டெஸ்ட் போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

திமுத் கருணாரத்ன 24ஆவது ஓவரில் துடுப்பெடுத்தாடியபோது, சொரோசனோ "ஷோர்ட் லெக்"கில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தார். இதன்போது, திமுத் அடித்த பந்து சொரோசனோ அணிந்திருந்த தலைக் கவசத்தை தாக்கியது.

இதில், நிலைகுலைந்து வீழ்ந்த அவர் உடனடியாக மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டார். அவரால் எழுந்திருக்க முடியாததால், ஸ்ரெட்சர் மூலம் மைதானத்துக்கு வெளியே சொரோசனோ அழைத்து செல்லப்பட்டார்.

பின்னர், கொழும்பு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப் படுகின்றது.

இது தொடர்பில் மேற்கிந்தியத்தீவுகளின் தனது ருவிட்டர் பக்கத்தில், "சொரோசனோவுக்கு ஸ்கான் செய்யப்பட்டது. அவரின் தலையில் சேதம் எதுவுமில்லை. ஆனாலும், அவர் ஓர் இரவு மருத்துவர்களின் கண்காணிப்பில் இருப்பார்", என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## எனது இறுதி போட்டி சென்னையிலேயே

### டோனி

சென்னை, நவ. 22

எனது கடைசி இருபது - 20 போட்டி சென்னையில்தான் நடைபெறும் என்று நம்புகிறேன் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மகேந்திர சிங் டோனி தெரிவித்தார்.

14ஆவது ஐ. பி. எல். தொடரின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியமைக்கான பாராட்டு விழா சென்னையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சென்னையுடனான இணைப்பைப் பொறுத்தவரை, 2008-இல் ஐ. பி. எல். தொடங்கியபோது தொடங்கியது. ஆனால், அதற்கு முன்பே மற்ற வகை கிரிக்கெட்டில் அந்த இணைப்பு தொடங்கிவிட்டது. டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் அறிமுகமான ஆட்டம் சென்னையில் நடைபெற்றது. அது மறக்க முடியாத நினைவு.

நான் சென்னை சுப்பர் கிங்ஸால் தெரிவு செய்யப்படுவேன் என்று தெரியாது. நான் புறப்பட்ட இடத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கலாசாரத்தைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை இது வழங்கியது. நான் தொடர் பயணத்திலேயே இருப்பவர்களைப் போன்றவன். என்னுடைய பெற்றோர்கள் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். பின்னர் அது உத்தரகண்டாக மாறியது. நான் ராஞ்சியில் பிறந்தேன். அது பீஹார். பின்னர் ஜார்க்கண்டாக மாறியது. 18 வயதில் ரயில்வே துறையில் மேற்கு வங்கத்தில் பணிபுரிந்தேன். பின்னர் சென்னை வந்தேன்.

சென்னையும், தமிழ்நாடும் எனக்கு நிறைய கற்றுக் கொடுத்தன. சேப்பாக்கத்தில் விளையாடிய அனைத்து ஆட்டங்களிலும் ரசிகர்கள் நல்ல கிரிக்கெட்டை ஆதரித்தார்கள். எதிரணி நன்றாக விளையாடக் கூடாது என்கிற மனநிலை சேப்பாக்கத்துக்குப் பொருந்தாது. நாங்கள் சிறப்பாக செயல்படாதபோது, நாங்கள் களத்தில் இல்லாதபோது ரசிகர்கள் எங்களை ஆதரித்தார்கள். எனது கடைசி இருபது - 20 போட்டி சென்னையில் நடைபெறும் என நம்புகிறேன்" என்றார். (ஐ)






## தேசிய அபிவிருத்தி கிரிக்கெட் அணியில் யாழ்ப்பாணத்தின் இரு வீராங்கனைகள்

கொழும்பு, நவ. 22

இலங்கை தேசிய அபிவிருத்தி மகளிர் கிரிக்கெட் அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் இருவர் இடம்பெற்றுள்ளனர்.

21 வயதுக்குட்பட்ட 20 பேர் கொண்ட அணியில், தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பழைய மாணவியான ஷானு பாஸ்கரன், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவியான மதுரிகா முரளிதாசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதில், ஷானு பாஸ்கரன் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணிக்காகவும் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அணியினர் அடுத்தாண்டு ஜனவரி 31 ஆம் திகதி வரை 3 மாத கால மேலதிக பயிற்சி பாசறைகளில் பங்கேற்பர். இதன் பின்னர், இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் மாகாண மற்றும் மாவட்ட கிரிக்கெட் போட்டிகளில் உள்வாங்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

**அணி விவரம்,** ரந்தி பிரேமரத்ன, சன்சலா வனிகசேகர, தருஷி ராஜகருணா, எஸ். எச். மஹேஷிகா, நிமேஷா தருணி, நவோத்யா நெத்மினி, இமொக்சா பாஷினி, சாவிந்தி நிமல்ஷா, மனோஹரி நிசன்சலா, சுலேஷா சத்சரணி, சேத்தனா விமுக்தி, அயேஷா டிலக்சனி, லங்கா திலினி, ஷானு பாஸ்கரன், ஜனனி வீரக்கோன் , தருஷி சத்சரணி, ஏரங்கி திசாநாயக்க, மதுரிகா முரளிதாசன், துலங்கா திஸநாயக்க, மெத்மா ஹெட்டியாரச்சி.

## பங்களாதேஷுடனான தொடரை வெற்றி கொண்டது பாகிஸ்தான்!

டாக்கா, நவ. 22

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியிலும் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரைக் கைப்பற்றியது.

பங்களாதேஷுக்கு சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதல் போட்டியில் 4 விக்கெட்களால் பாகிஸ்தான் வென்றது. இந்த நிலையில், இரண்டாவது இருபது - 20 போட்டி சனிக்கிழமை நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அந்த அணி 7விக்கெட்கள் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஷான்டோ 40 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஷதாப் கான், ஷஹீன் அப்ரிடி தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

109 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் தொடக்க ஆட்டக்காரர்களாக முகமது ரிஸ்வான் மற்றும் அணித் தலைவர் பாபர் அஸாம் களமிறங்கினர். அஸாம் ஓர் ஓட்டத்துக்கு முஸ்தபிஸூர் ரஹ்மான் பந்தில் போல்ட் ஆனார்.

இதன்பிறகு, ரிஸ்வானுடன் இணைந்த பகார் ஸமான் கூட்டணி அமைத்தார். வெற்றிக்குத் தேவையான இலக்கு குறைவு என்பதால், ஓட்டவேகம் மெதுவாகவே உயர்ந்தது. 39 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ரிஸ்வான் ஆட்டமிழந்தார். எனினும், ஷமான் அரைச்சதம் அடித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் வெற்றியை உறுதி செய்தார்.

ஷமான் 51 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம், 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.



# ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி எதுவும் இல்லை!

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன கூறுகின்றார்



**கொழும்பு, நவ. 22**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி எதுவும் கிடையாது எனச் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்படுகின்றது என்பது குறித்து சஹ்ரான் காணொலியில் விளக்கியுள்ளார். அல்லாஹ்வின் விருப்பத்தின் பேரில் ஜிஹாதிய புனிதப் போர் நடத்தப்படுகின்றது.

நியூசிலாந்தில் பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் நோக்கில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. அல்லாஹ்வின் வீட்டுக்குள் தலையீடு செய்ய அனுமதிக்கப்படாது.

சஹ்ரானுடன் பேசிய அபுஹித் என்பவர் இந்திய பொலிஸ் உத்தியோகத்தராவார். அவரே ஈஸ்டர் தாக்குதல் பற்றி இலங்கைக்குத் தகவல் வழங்கியவர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே இந்த எச்சரிக்கை வழங்கப்பட்டது.

இந்த தாக்குதலின் பின்னணியில் அடிப்படைவாத, மதவாத மற்றும் பயங்கரவாத செயல்பாடுகளே காணப்படுகின்றன. அரசியல் சூழ்ச்சித் திட்டம் இல்லை" - என்றார். (இ)



# மின்சாரம் தாக்கி யானை மரணம்!

## மின்வேலி அமைத்தவர் கைது

அனுராதபுரம், நவ. 22

அனுராதபுரம், பலுகஸ்வெள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சியம்பலாத்மன பிரதேசத்திலுள்ள வீட்டுத் தோட்டத்தைச் சுற்றி போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 45 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்தார் என ரிதிகல வனபாது காப்பு அதிகாரி எம்.டி.புஸ்ப குமார தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குறித்த வீட்டுத் தோட்டத்தின் உரிமையாளரை வனப் பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

நாமல்புர, சியமலாகஸ்தமன பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் காட்டு யானைகள் வீட்டுத் தோட்டத்துக்குள் ஊடுருவதைத் தடுக்கும் நோக்கில் சட்டவிரோதமாக வீட்டுத் தோட்டத்தை சுற்றி மின்வேலியை அமைத்திருந்தார் என அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், குறித்த தோட்டப் பகுதிக்கு வந்த காட்டு யானை மின் வேலியில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

சுமார் 10 அடி உயரமான யானையே இவ்வாறு உயிரிழந்தார். (இ)

# 'பேஸ்புக்' ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்டத்தில் பங்கேற்ற 12 பேர் கைது

கொழும்பு, நவ. 22

பேஸ்புக் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட 12 இளைஞர்கள் போதைப் பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மாத்தளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

மாத்தறை - பெலேன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் களியாட்ட நிகழ்வுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இளைஞர்கள் வந்திருந்தனர் எனவும், களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்டிருந்த 6 பேரிடமிருந்து 1,695 மில்லி கிராம் கொக்கைன், இருவரிடமிருந்து 1,250 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், கஞ்சா உள்ளிட்டவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் களியாட்ட நிகழ்வு தொடர்பில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை டுத்து இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

# கடலில் வீழ்ந்து மீனவர் மாயம்!

## தொடர்கின்றது மீட்புப் பணி

காலி, நவ. 22

காலி, மாகொல்லை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றில் பயணித்த நபர் ஒருவர் கடலில் வீழ்ந்து காணாமல்போயுள்ளார் என்று காலி துறைமுகப் பொலிஸாருக்கு நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மாகொல்லை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து இழுவைப் படகு புறப்பட்டுச் சென்ற நிலையில், அதில் பயணித்த மீனவர் ஒருவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் கடலில் தவறி விழுந்து காணாமல்போனார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் 400 கடல் மைல் தொலைவில் கடலில் விழுந்து காணாமல் போயுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

ரத்கமை பகுதியைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு காணா மல்போயுள்ளார்.

காணாமல்போனவரைத் தேடும் நடவடிக்கையை காலி துறைமுகப் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ஆளும் கட்சி எம்.பி.யின் கருத்தையே மறுதலிக்கும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு

கொழும்பு, நவ. 22

ஆளும் கட்சிக்குள் உள்பூசல்கள் அதிகரித்து வரும் நிலையில், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவு மறுப்பு அனுப்பி வைத்துள்ளது.

அந்த ஊடக அறிக்கையில், "கடந்த இரண்டு வருடகால ஆட்சிக் காலத்தில், சவால்களுக்கு மத்தியில் குறைவான வளப் பயன்பாட்டுடன் பெரிய வேலைத் திட்டங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள முழுமையான ஊழியர்கள் மற்றும் வாகன எண்ணிக்கை என்பன, நல்லாட்சிக் காலத்திலிருந்த ஊழியர் மற்றும் வாகன எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

விடயம் இவ்வாறு இருக்கும்போது, சரியான தகவல்கள் அல்லது தரவுகளை ஆய்வு செய்யாமல், ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனப் பயன்பாடு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி,



பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானதும் சரிவர ஆய்வு செய்யாமலும் முன்வைக்கப்பட்டவை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை புரிகின்ற எந்தவோர் அதிகாரியும் வாகனத் தொடரணியைப் பயன்படுத்துவதில்லை என்பதைப் பொறுப்புடன் கூற வேண்டும். அதேபோன்று, அதிகாரிகள் தமது பதவிக்குரிய வாகனத்தைக்கூட பயன்படுத்தாது, கடமைக்கு ஏற்ற வகையில் பட்டியலில் உள்ள வாகனங்களையே குறித்த கடமையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

அதனால், சந்திம வீரக்கொடி உண்மையான விடயத்தை அறியாது, இவ்வாறு தவறான தகவல்களை முன்வைப்பது வருந்தத்தக்க விடயமாகும் என்று ஜனாதிபதி அலுவலகம் சுட்டிக்காட்டுகின்றது" - என்றுள்ளது. (இ)

# ஹோட்டலில் ஆணின் சடலம் கொலையா? தற்கொலையா?

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, நவ. 22

ஹோட்டலொன்றின் அறைக்குள் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராமக்கெலே, வலவிவத்த பிரதேசத்திலுள்ள ஹோட்டலில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திஸ்வெல்ல கிரிந்திவெல்ல பிரதேசத்தை சேர்ந்த 35 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

**DAN CINE MARATHON**

**மாபெரும் குறும்படப் போட்டி**

இது நமது திரைத்துறை கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில் கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :

075 313 2901, 075 313 2932, 076 921 3686



### சுமந்திரன்...

அமெரிக்காவின் அழைப்பின் பேரில் எம். ஏ. சுமந்திரன் எம். பி. தலைமையில் மூவர் கொண்ட நிபுணர் குழு அமெரிக்கா சென்றது. இந்தக் குழுவுடன் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் இரா. சாணக்கியனும் பங்கேற்றார்.

அமெரிக்க சந்திப்பை முடித்துக் கொண்ட அவர்கள் கனடா சென்றுள் ளனர். அங்கு, ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சுமந்திரனும், சாணக்கியனும் பங்கேற்ற போது, சுமந் திரன் உரையாற்ற முற்பட்டபோது அவரை பேசவிடாது எதிர்ப்பு தெரிவித்த னர். 'தமிழினத் துரோகி', 'பச்சைத் துரோகி', 'கள்ள வாக்கு எம்.பி.' என்று பலர் கோஷங்களை எழுப்பினர்.

எனினும், தொடர்ந்து சுமந்திரன் எம். பி. பேச முற்பட்ட போதும், அவரை பேசவிடாது பெரும் குழப்பம் ஏற்படுத் தப்பட்டது. ஒரு கட்டத்தில் எதிர்ப்பா ளர்களை சமாளிக்க முடியாமல் கனடிய பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து சுமந்திரன் வெளி யேற, அவருடன் சாணக்கியனும் வெளி யேறியிருந்தார். இதைத் தொடர்ந்து கூட் டமும் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக் கப்பட்டது. (ஐ)

### தேச வழமை...

ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

வடக்குக்கு வந்துள்ள ஒரே நாடு ஒரே ஜனாதிபதி செயலணி நேற்று யாழ்ப்பா ணம் வந்தது. தனியார் விடுதி ஒன்றில் சந் திப்பை நடத்திய அந்த செயலணி, பின் னர் செய்தியாளர்களை சந்தித்து கருத்து வெளியிட்டது. இதன்போதே, ஞானசார தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நாம் ஒன்றுபட எந்த அரசி யல்வாதிகளும் விரும்பவில்லை. ஆகவே, ஒரே நாடு ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை. போதைப் பொருளால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக் கிறார்கள். விளக்கேற்றுவதற்காக கேட்கும் அரசியல்வாதிகள் போதைப் பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்க தயாரில்லை. தமிழர்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள்.

"கடந்த 19ஆம் திகதி அன்று கார்த் திகை விளக்கீடு நிகழ்விலே பாதுகாப்பு தரப்பினர் தலையீடு செய்தமை தொடர் பில் அது சம்பந்தமான விளக்கத்தை நாம் பெறுவோம்."- என்றார்.

ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியில் தமிழர்களை முதலில் சேர்க்காமல் எதிர்ப் புக்கள் வந்த பின்னர் சேர்த்தமை தொடர் பாக கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதி லளித்தபோது,

"இந்த செயலணியை ஆரம்பித்தபோது பிரச்னை ஒன்றாகவே இருந்தது. அந்த சந் தர்ப்பத்தில் தமிழர்களை நியமிக்கவேண் டிய தேவையிருக்கவில்லை. பொதுவா கவே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக் கும் ஒரே பிரச்னையே காணப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற் பட்டது. முஸ்லிம்களுக்கு பல சட்டங்கள் இருப்பதால் அந்த சட்டத்தை பொதுச் சட்டத்தின்கீழ் கொண்டுவர விரும்பி னோம். பல்வேறு சட்டங்கள் இருப்பதால் அதனை ஒரு சட்டமாக்க விரும்புகிறோம்.

தேச வழமைச் சட்டத்தில் உள்ள நல் லதையும் பெறவேண்டும். கண்டியச் சட் டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட் டத்தை ஏற்படுத்துவோம். எல்லா சட் டங்களிலும் இருக்கின்ற நல்ல விடயங் களை சேர்த்து ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற சம் பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப் பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உரு வாக்க வேண்டும் - என்றார். (ஐ)

### டெல்டாவின்...

வித்தார்.

தடுப்பூசி பெற்றுள்ள பலருக்கும் தொற்று அறிகுறிகள் ஏற்படும்போது அதனை உதாசீனப்படுத்துகின்றனர். அவ் வாறு பொறுப்பின்றி செயல்படாமல் அறி குறிகள் காணப்படுமாயின் அன்ரிஜென் பரிசோதனையையாவது மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்டவர் களில் 90 சதவீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை யில் இலங்கையில் உருவான முதலாவது டெல்டாவின் உப திரிபு தற்போது இனங் காணப்பட்டுள்ளது.

முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் கோவிட் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் கணிசமானளவு குறை வாகும்.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசியைப் பெற்று கோவிட் தொற்றுக்கு உள்ளாப வர்களுக்கு சிறியளவிலான தடிமன் போன்ற நிலைமை மாத்திரமே ஏற்படுகிறது. இதன் காரணமாக தடுப்பூசி பெற்றுள்ள பலரும் தொற்று அறிகுறிகள் ஏற்படும் போது அதனை உதாசீனப்படுத்துகின்றனர்.

அவ்வாறு பொறுப்பின்றி செயல்படா மல் அறிகுறிகள் காணப்படுமாயின் அன்ரி ஜென் பரிசோதனையையாவது மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின் றோம். காரணம் தடுப்பூசி பெற்றுக் கொண் டவர்களுக்கு தொற்று ஏற்பட்டாலும், அது தீவிர நிலைமைக்கு கொண்டு செல் லாது என்ற போதிலும், அவர்களிடமி ருந்து ஏனையோருக்கு தொற்று பரவி னால் அது பெரும் பாதிப்புக்களை ஏற் படுத்தும் - என்றார். (ஐ)

### ஆயர்களின்...

வர் என். சிறீகாந்தா.

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சி யில் நேற்றிரவு 7 மணிக்கு ஒளிபரப்பான "ஸ்பொட்லைற்" நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஆயர்களின் கருத்தை சர்ச்சையாக்க தேவையில்லை. இந்து மதவாதத்தை வைத்து தமிழ்த் தேசியத்தை உடைப் பதற்கு சதித்திட்டம் உள்ளது.

தமிழ் அரசு கட்சி தலைவர் தொடர் பில் குழப்பம் உள்ளது. மாவை தமிழ் அரசுக் கட்சியை சரியாக வழிநடத்த வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

"அமெரிக்கா சென்ற கட்சியினரால் நல்லது நடந்தால் சிறப்பு. தமிழ்த் தேசிய உணர்வுள்ள தேர்தல் அரசியல் சாராதவர் கள் ஒற்றுமை முயற்சியில் ஈடுபட வேண் டும்", என்றும் அவர் மேலும் குறிப்பிட் டார்.

# சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய தேவையில்லை!

## மத்திய வங்கி ஆளுநர் சொல்கிறார்

கொழும்பு, நவ. 22

டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவை கிடையாது. நாணய நிதியத்திடம் கடன் பெற்றால் மீண்டும் நெருக்கடிகளை எதிர்க் கொள்ள நேரிடுவதுடன், அவர்களின் நிபந் தனைகளுக்கும் அடிபணிய நேரிடும்.

அது ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் இலக்கிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண் பதற்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற வேண்டும் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டொலர் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். கடந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றதன் காரணமாகவே நெருக்கடிக்குள்ளானது. தற்போதைய அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கும் முயற்சிகளை எதிர்தரப்பினர் மேற்கொள்கிறார்கள்- என்றார்.

### கொரோனா...

உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள் ளது.

இவ்வாறு மரணமடைந்த 19 பேரில் 12 பேர் ஆண்கள், 07 பேர் பெண்கள் என் பதுடன், 60 வயதுக்கு மேற்பட்டோர் 11 பேர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண் ணிக்கை 14 ஆயிரத்து 127 ஆக அதிகரித் துள்ளது. (இ)

### அனைத்துத்...

முறைகளைப் பின்பற்றுவதை ஆசிரியர் கள் மற்றும் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட் டுள்ளார்.

கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக பல மாதங்களாக பாடசாலை கள் மூடப்பட்டிருந்த நிலையில் தற்போது சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் நான்கு கட்டங்களாக பாடசாலை கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டத்தின் கீழ், 200க்கும் குறை வான மாணவர்களைக் கொண்ட பாட சாலைகளின் ஆரம்பப் பிரிவு மீண்டும் திறக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக அனைத்து பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு திறக்கப்பட்டது.

மூன்றாம் கட்டமாக க. பொ. த. சாதா ரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக் கான பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப் பட்டன. இறுதிக் கட்டத்தின்கீழ், மீத முள்ள தரங்கள் கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களின்கீழ் இன்று திங்கட் கிழமை முதல் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க உள்ளன.

எனவே, மாணவர்கள் பாடசாலைக் குள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதனை ஆசிரியர்கள் மற்றும் அதிபர் உறுதிப்படுத்தவேண்டும் என அறி வுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல் லும் போதும் வீடு திரும்பும் போதும் அவர்களது சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பெற்றோர் பாதுகாவலர்கள் உரிய கவனம் செலுத்தவேண்டும். நாட் டில் தற்போது கண்டறியப்பட்டுள்ள கோவிட்-19 டெல்டா புதிய திரிபு சிறுவர் களிடையே வேகமாகப் பரவும் அபாய முள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே, சகல தரப்பினரும் உரிய வகையில் சுகாதார நடைமுறைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

### காணாமலாக்கப்...

காணாமலாக்கப்பட்டோருக்கான அலு வலகம் கோரியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளதை உறுதி செய்வதாக கடிதத்தில் தெரிவித் துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான அலுவலகம், ஏற்கனவே சமர்ப்பிக் கப்பட்டுள்ள ஆவணங்கள் போதுமான வையல்ல என குறிப்பிட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் புள்ளியிடப்படாத ஆவணங் களை கோரியுள்ள அலுவலகம், அவற்றை மாத்திரம் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

### 35 வீதத்தால்...

வது 35 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் மத்தியகுழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

தற்போது டெல்டா திரிபின் உப பிறழ்வொன்றும் இனங்காணப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான புதிய திரிபுக்கள் இனங் காணப்படும் போது தொற்றாளர் எண் ணிக்கை அதிகரிப்பதோடு மாத்திரமின்றி, தொற்றுக்குள் உள்ளாவோர் தீவிர நிலை மையை அடையும் சாத்தியமும் அதிக மாகும்.

நாட்டில் கோவிட் பரவலில் சற்று அதி கரிப்பு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தளர்வுகள் மற்றும் மக்களின் பொறுப் பற்ற நடவடிக்கைகளினால் தொற்று நாளாந்தம் அதிகரித்த போக்கினையே காண்பிக்கிறது.

கடந்த வாரத்தில் மாத்திரம் 6420 தொற் றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதற்கு முந்தைய வாரத்தில் இனங் காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை 4728 ஆகும் - என்றார். (ஐ)

### தொற்று அறிகுறி...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்து வர் அசேல குணவர்த்தன பெற்றோர்களி டம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மாணவர் ஒருவருக்கு கோவிட்-19 தொற்று உறுதியானதாக சந்தேகித்தாலோ அல்லது தொற்று உறுதி யானாலோ பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் அடங்கிய சுகா தார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள் ளது.

அவ்வாறு மாணவர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டால், அவர்களைத் தனிமைப் படுத்துவதற்கான தனி இடம் ஒன்று பாட சாலைகளில் இருக்க வேண்டும் என அறி வுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் நுழை வாயிலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் களின் உடல்நலம் குறித்துக் கண்காணிப் பது அத்தியாவசியமாகும். மாணவர் ஒரு வருக்கு தொற்று உறுதியானால் உடனடி யாக பெற்றோர் அல்லது பாதுகாவல ருக்கு அறிவிக்க வேண்டும்.

அத்துடன், அந்தப் பகுதிக்குப் பொறுப் பான சுகாதார தரப்பினருக்கு அறியப் படுத்துமாறும் குறித்த சுகாதார வழிகாட் டலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பதுளை சிறைச்சாலையில் 12 கைதிகளுக்குத் தொற்று

பதுளை, நவ. 22

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அங்கு பி.சி.ஆர். பரிசோதனைகளில் இந்தத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று பதுளை நிர்வாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பியல் பத்ம தெரிவித்துள்ளார்.

95 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே 12 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிய ரெபீட் அன்ரிஜென் பரிசோதனைகளை நடத்தவுள்ளதாகவும் பியல் பத்ம மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# விபத்தில் வயோதிபர் மரணம்!

கொழும்பு, நவ. 22

வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

களுத்துறை, பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதி, வகவத்த சந்தியில் இரத்தினபுரியிலிருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த கார், பாணந்துறையிலிருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்றின் மீது மோதியதில் குறித்த மோட்டார் சைக்கிள், பின்னால் வந்த லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் ஹொரன வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார்.

மஹஹேன, ஹொரன பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக ஹொரண வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்து.

விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# எரிபொருள், சீமெந்து தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தி செய்யப்படும்

கொழும்பு, நவ. 22

சந்தையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு அடுத்த சில நாட்களில் முடிவுக்கு வரும் என நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளாந்தம் ஒரு இலட்சம் வரையில் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு அந்தந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

மேலும், சந்தையில் சீமெந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு அடுத்த இரு வாரங்களில் நிவர்த்தி செய்யப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சீமெந்து பொதியொன்று 1,275 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

### பருத்தித்துறை, மல்லாகத்தில் நவம்பர் 28 வரை

# நினைவேந்தலுக்கு தடை கோரிய விண்ணப்பங்கள் இன்று பரிசீலனை

யாழ்ப்பாணம், நவ. 22

**மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.**

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலும், சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றிலும் கடந்த வெள்ளிக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு தடை கோரி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதிவரை இந்த தடை உத்தரவு வழங்குமாறு பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் 120ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அதன்போது , நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரமும் பொது மக்களை ஒன்றுதிரட்டுவதற்குத் தடை உள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு நீதிமன்றங்களிலும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளோர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனைத் தொடர்ந்து அந்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை நடைபெறும் எனவும், அதன் பின்னர் கட்டளை பிறப்பிப்பதாக குறிப்பிட்ட நீதிமன்றங்கள், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்க உத்தரவிட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், தடை உத்தரவுக் கட்டளையை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

### வரவு - செலவுத் திட்டத்தில்

# அரச அதிகாரிகள் புறக்கணிப்பை கண்டித்து 29ஆம் திகதி வேலைநிறுத்த போராட்டம்

கொழும்பு, நவ. 22

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச அதிகாரிகளைப் புறக்கணித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 29ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை அரச அதிகாரிகளின் தொழில்சங்க ஒன்றியங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் பிரதீப் பஸ்நாயக்க,

“அரச அதிகாரிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்ட எழுத்து மூல கோரிக்கைக்கு இது வரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

அதன் காரணமாக எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் எங்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் நாடு தழுவி ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

அதற்கமைய, கிராம அதிகாரிகள், ஒருங்கிணைப்பு அதிகாரிகள், முகாமையாளர் சேவை அதிகாரிகள், விவசாய பரிசோதனை உதவி அதிகாரிகள், காரியாலய சேவை அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வார்கள்” - என்றார். (இ)

# இலங்கை மத்திய வங்கிக்கு நான்கு புதிய உதவி ஆளுநர்கள்

கொழும்பு, நவ. 22

இலங்கை மத்திய வங்கி நான்கு புதிய உதவி ஆளுநர்களை நியமித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற நாணயச் சபைக் கூட்டத்தில், மத்திய வங்கியின் நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் உதவி ஆளுநர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கே. ஜி. பி. சிறிகுமார, டி. குமாரதுங்க, யு. எல். முதுகல மற்றும் சி. பி. எஸ். பண்டார ஆகியோர் 2021 நவம்பர் 17ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் உதவி ஆளுநர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

பகல்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா-தி.மைக்கல்-தலவைர்- யாழ் நீரிழிவு கழகம்



7.00 மணி : சொற்சமர் - பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி - தமிழ்த் தேசியம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு